4. **நிஷாந்தி, 12 கி.மீ தூரத்திற்கான மாரத்தான் ஓட்டத்தின் வெற்றியாளர் ஆவார். அவர் மணிக்கு 12 கி.மீ என்ற சீரான வேகத்தில் ஓடி, இலக்கினை 1 மணி நேரத்தில் அடைந்தார். அவரைத் தொடர்ந்து ஆராதனா, பொன்மொழி, ஜெயந்த், சத்யா மற்றும் சுவேதா ஆகியோர் முறையே 6 கி.மீ/மணி, 4 கி.மீ/மணி, 3 கி.மீ/மணி மற்றும் 2 கி.மீ/மணி என்ற வேகத்தில் ஓடி வந்தனர். அவர்கள் அந்த தூரத்தை முறையே 2 மணி, 3 மணி, 4 மணி, மற்றும் 6 மணி நேரத்தில் அடைந்தனர். வேகம் - நேரம், வரைபடம் வரைந்து அதனைப் பயன்படுத்தி, மணிக்கு 2.4 கி.மீ/மணி வேகத்தில் சென்ற கௌசிக் எடுத்துக்கொண்ட நேரத்தைக் காண்க.**

தீர்வு: I. அட்டவணை:

வேகம் (x) (கி.மீ/மணி)	12	6	4	3	2
நேரம் y மணி	1	2	3	4	6



II. மாறுபாடு: அட்டவணையிலிருந்து x குறையும்போது y அதிகரிக்கின்றது என நாம் காண்கிறோம். ஆகவே, இது எதிர் மாறுபாடு ஆகும்.

$\Rightarrow xy = k, k > 0$, k என்பது விகிதசம மாறிலியாகும்.

இங்கு $xy = 12\times1 = 6\times2 = \ldots\ldots = 2\times6 = 12 = k$

$\therefore xy = 12$

III. **புள்ளிகள்:** (12, 1), (6, 2), (4, 3), (3, 4), (2, 6)

IV. **தீர்வு:** $x = 2.4 \Rightarrow 2.4\times y = 12 \Rightarrow y = \frac{12}{2.4} = 5$

வரைபடத்திலிருந்து மணிக்கு 2கி.மீ/மணி வேகத்தில் கௌசிக் எடுத்து கொண்ட நேரம் மணி நேரமாகும்.

5. ஒரு துணிக்கடையானது தனது வாடிக்கையாளர்களுக்கு வாங்கும் ஒவ்வொரு பொருளின் மீதும் 50% தள்ளுபடியை அறிவிக்கிறது. குறித்த விலைக்கும் தள்ளுபடிக்குமான வரைபடம் வரையவும். மேலும்,
(i) வரைபடத்திலிருந்து, ஒரு வாடிக்கையாளர் 3250 ஐ தள்ளுபடியாகப் பெற்றால் குறித்த விலையைக் காண்க.
(ii) குறித்த விலையானது 2500 எனில் தள்ளுபடியைக் காண்க.

தீர்வு: **I. அட்டவணை:**

குறித்த தொகை ₹ (x)	1000	2000	3000	4000	5000	6000
தள்ளுபடி ₹ (y)	500	1000	1500	2000	2500	3000

II. மாறுபாடு: அட்டவணையிலிருந்து 'x' அதிகரிக்க 'y' யும் அதிகரிக்கிறது என நாம் காண்கிறோம். ஆகவே, இது நேர் மாறுபாடு ஆகும்.

$y = kx$, இங்கு k என்பது விகிதசம மாறிலியாகும்.

$k = \frac{y}{x} = \frac{500}{1000} = \frac{1000}{2000} = \frac{1}{2}$

∴ தேவையான சமன்பாடு $y = \frac{1}{2}x$

III. புள்ளிகள்: (1000, 500), (2000, 1000), (3000, 1500), (4000, 2000), (5000, 2500), (6000, 3000)

IV. தீர்வு: i. வரைபடத்திலிருந்து y = ₹3250 எனில் x = ₹6500. அதாவது குறித்த தொகை = ₹6500

ii. வரைபடத்திலிருந்து x = ₹2500 எனில் y = ₹1250. அதாவது தள்ளுபடி = ₹1250



6. $xy = 24, x, y > 0$ என்ற வரைபடத்தை வரையவும். வரைபடத்தைப் பயன்படுத்தி,
(i) $x = 3$ எனில் y ஐக் காண்க மற்றும் (ii) $y = 6$ எனில் x–ஐக் காண்க.

தீர்வு:

I. அட்டவணை:

x	1	2	3	4	6	12	24
y	24	12	8	6	4	2	1

II. மாறுபாடு:

அட்டவணையிலிருந்து 'x' அதிகரிக்க 'y' குறைகிறது என நாம் காண்கிறோம். ஆகவே இது எதிர்மாறுபாடு ஆகும்.

i.e. $xy = k$

$xy = 1 \times 24 = 2 \times 12 = \ldots.. = 12 \times 2$
$= 24 \times 1 = 24 = k$

$\therefore xy = 24$

III. புள்ளிகள்:

(1, 24), (2, 12), (3, 8), (4, 6), (6, 4), (12, 2), (24, 1)

IV. தீர்வு:

i. $x = 3 \Rightarrow 3 \times y = 24$

$y = \frac{24}{3} = 8 \quad \therefore y = 8$

ii. $y = 6 \Rightarrow x \times 6 = 24$

$x = \frac{24}{6} = 4 \quad \therefore x = 4$



7. $y = \frac{1}{2}x$ என்ற நேரிய சமன்பாட்டின்/சார்பின் வரைபடம் வரையவும். விகிதசம மாறிலியை அடையாளம் கண்டு, அதனை வரைபடத்துடன் சரிபார்க்க. மேலும் (i) $x = 9$ எனில் y ஐக் காண்க. (ii) $y = 7.5$ எனில் x ஐக் காண்க.

தீர்வு: I. அட்டவணை:

x	2	4	6	8	10
y	1	2	3	4	5

II. மாறுபாடு:

அட்டவணையிலிருந்து 'x' அதிகரிக்க 'y' யும் அதிகரிக்கிறது என நாம் காண்கிறோம். ஆகவே, இது நேர்மாறுபாடு ஆகும்.

$y = kx$, k என்பது விகிதசம மாறிலியாகும்.

$k = \frac{y}{x} = \frac{1}{2} = \frac{2}{4} = \frac{3}{6} = \ldots = \frac{1}{2}$;

$\therefore$ தேவையான சமன்பாடு $y = \frac{1}{2}x$

III. புள்ளிகள்:

(2, 1), (4, 2), (6, 3), (8, 4), (10, 5)

IV. தீர்வு:

வரைபடத்திலிருந்து $x = 9$ எனில், $y = 4.5$

வரைபடத்திலிருந்து $y = 7.5$, எனில் $x = 15$



8. ஒரு தொட்டியை நிரப்பத் தேவையான குழாய்களின் எண்ணிக்கையும் அவை எடுத்துக் கொள்ளும் நேரமும் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழாய்களின் எண்ணிக்கை (x)	2	3	6	9
எடுத்துக் கொள்ளும் நேரம் (y) நிமிடங்களில்	45	30	15	10

மேற்காணும் தரவுகளுக்கு வரைபடம் வரைந்து,

(i) 5 குழாய்களை பயன்படுத்தினால், தொட்டி நிரம்ப எடுத்துக் கொள்ளப்பட நேரத்தைக் காண்க.

(ii) 9 நிமிடங்களில் தொட்டி நிரம்பினால், பயன்படுத்தப்பட்ட குழாய்களின் எண்ணிக்கையைக் காண்க.

தீர்வு: I. அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)

குழாய்களின் எண்ணிக்கை (x)	2	3	6	9
எடுத்துக்கொள்ளும் நேரம் (y) நிமிடங்களில்	45	30	15	10

II. மாறுபாடு:

அட்டவணையிலிருந்து 'x' அதிகரிக்க 'y' குறைகிறது என நாம் காண்கிறோம். ஆகவே, இது எதிர்மாறுபாடு ஆகும். i.e. $xy = k$

$xy = 2 \times 45 = 3 \times 30 = \ldots = 9 \times 10 = 90\ (k)$

$\therefore$ தேவையான சமன்பாடு $xy = 90$

III. புள்ளிகள்: (2, 45), (3, 30), (6, 15), (9, 10)

IV. தீர்வு:

வரைபடத்திலிருந்து $x = 5 \Rightarrow 5 \times y = 90$

$y = \frac{90}{5} = 18$

எனவே குழாய்களைக் கொண்டு தொட்டியை நிரப்ப எடுத்துக் கொள்ளும் காலம் 18 நிமிடங்கள்.

வரைபடத்திலிருந்து $y = 9 \Rightarrow x \times 9 = 90 \Rightarrow x = \frac{90}{9} = 10$

9 நிமிடங்களில் தொட்டியை நிரப்பத் தேவைப்படும் குழாய்களின் எண்ணிக்கை 10.



9. ஒரு பள்ளியானது, குறிப்பிட்ட சில போட்டிகளுக்கு, பரிசுத் தொகையினை எல்லா பங்கேற்பாளர்களுக்கும் பின்வருமாறு சமமாக பிரித்து வழங்குவதாக அறிவிக்கிறது.

பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை (x)	2	4	6	8	10
ஒவ்வொரு பங்கேற்பாளரின் தொகை (y)	180	90	60	45	36

(i) விகிதசம மாறிலியைக் காண்க.

(ii) மேற்காணும் தரவுகளுக்கு வரைபடம் வரைந்து, 12 பங்கேற்பாளர்கள் பங்கெடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பங்கேற்பாளரும் பெறும் பரிசுத் தொகை எவ்வளவு என்பதைக் காண்க.

தீர்வு: I. அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)

பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை (x)	2	4	6	8	10
ஒவ்வொரு பங்கேற்பாளரின் தொகை ₹ (y)	180	90	60	45	36

II. மாறுபாடு: அட்டவணையிலிருந்து 'x' அதிகரிக்க 'y' குறைகிறது என நாம் காண்கிறோம்.

ஆகவே, இது எதிர்மாறுபாடு ஆகும்.

i.e. $xy = k$ இங்கு k என்பது விகிதசம மாறிலியாகும்.

$xy = 2 \times 180 = 4 \times 90 = \ldots = 10 \times 36 = 360\ (k)$

$\therefore$ தேவையான சமன்பாடு $xy = 360$

III. புள்ளிகள்:

(2, 180), (4, 90), (6, 60), (8, 45), (10, 36)

IV. தீர்வு: i. விகிதசம மாறிலி $k = xy = 2 \times 180 = 360$

ii. வரைபடத்திலிருந்து $x = 12$ எனில் $xy = 360$

$\Rightarrow 12y = 360 \Rightarrow y = \dfrac{360}{12} = 30$

கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் பெறும் தொகை ₹ 30



10. பேருந்து நிலையம் அருகே உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் பெறப்படும் கட்டணத் தொகை பின்வருமாறு:

நேரம் (மணியில்) (x)	4	8	12	24
கட்டணத் தொகை (y)	60	120	180	360

பெறப்படும் கட்டணத் தொகையானது வாகனம் நிறுத்தப்படும் நேரத்திற்கு நேர் மாறுபாட்டில் உள்ளதா அல்லது எதிர் மாறுபாட்டில் உள்ளதா என ஆராய்க. கொடுக்கப்பட்ட தரவுகளை வரைபடத்தில் குறிக்கவும். மேலும், (i) நிறுத்தப்படும் நேரம் 6 மணி எனில், கட்டணத்தொகையைக் காண்க. (ii) 150 ஐ கட்டணத் தொகையாகச் செலுத்தி இருந்தால், நிறுத்தப்பட்ட நேரத்தின் அளவைக் காண்க.

தீர்வு: I. அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)

நேரம் (மணியில்) (x)	4	8	12	24
கட்டணத் தொகை ₹ (y)	60	120	180	360

II. மாறுபாடு: அட்டவணையிலிருந்து 'x' அதிகரிக்க 'y' யும் அதிகரிக்கிறது என நாம் காண்கிறோம். ஆகவே, இது நேர்மாறுபாடு ஆகும்.

$y = kx$, இங்கு k என்பது விகிதசம மாறிலியாகும்.

$k = \dfrac{y}{x} = \dfrac{60}{4} = \dfrac{120}{8} = \ldots = \dfrac{30}{2} = 15\ (k)$

$\therefore$ தேவையான சமன்பாடு $y = 15x$

III. புள்ளிகள்: (4, 60), (8, 120), (12, 180), (24, 360)

IV. தீர்வு: வரைபடத்திலிருந்து, $x = 6$ எனில்

$y = 15 \times 6 = 90$. செலுத்த வேண்டிய தொகை ₹ 90.

வரைபடத்திலிருந்து $y = 150$ எனில் $x = \dfrac{150}{15} = 10$

அதாவது வாகனம் நிறுத்தப்பட அனுமதிக்கும் கால அளவு = 10 மணி



4. வடிவியல்

2 மதிப்பெண்கள்

1. ΔABC ஆனது Δ DEF-க்கு வடிவொத்தவை. மேலும் $BC = 3$ செ.மீ, $EF = 4$ செ.மீ மற்றும் முக்கோணம் ΔABC -யின் பரப்பு = 54 செ.மீ^{2} எனில், ΔDEF-யின் பரப்பைக் காண்க.

தீர்வு:

இரு வடிவொத்த முக்கோணங்களுடைய பரப்புகளின் விகிதமானது அவற்றின் ஒத்த பக்கங்களுடைய வர்க்கங்களின் விகிதத்திற்குச் சமம் என்பதால்

$$\frac{\Delta ABC \text{ -யின் பரப்பளவு}}{\Delta DEF \text{ -யின் பரப்பளவு}} = \frac{BC^2}{EF^2}$$

$$\frac{54}{\Delta DEF \text{ -யின் பரப்பளவு}} = \frac{3^2}{4^2}$$

$$\Delta \quad DEF\text{-யின் பரப்பளவு} = \frac{16\times 54}{9}$$

$$= 96 \text{ செ.மீ}^2$$

2. கீழே கொடுக்கப்பட்டவற்றில் எந்த முக்கோணங்கள் வடிவொத்தவை என்பதைச் சோதிக்கவும். மேலும் x-யின் மதிப்பு காண்க.

i) 

ii) 

தீர்வு:

i. படத்திலிருந்து

$$\frac{AC}{AE} = \frac{3\frac{1}{2}+2}{2} = \frac{\frac{7}{2}+2}{2} = \frac{\frac{7+4}{2}}{2}$$

$$= \frac{11}{2}\times\frac{1}{2} = \frac{11}{4} \quad \text{----(1)}$$

$$\frac{AB}{AD} = \frac{3+5}{3} = \frac{8}{3} \quad \text{----(2)}$$

$$(1), (2) \Rightarrow \frac{AC}{AE} \neq \frac{AB}{AD}$$

$\therefore \Delta ABC$ மற்றும் ΔADE வடிவொத்தவை அல்ல.

ii. படத்திலிருந்து ΔABC மற்றும் ΔPQC

$\angle ABC = \angle PQC = 70°$ ----(1)

(ஒத்த கோணங்கள் சமம்)

$\angle C = \angle C$ (பொது கோணம்) ----(2)

$\therefore \angle A = \angle QPC$ ($\because AAA$ விதிப்படி)

ΔABC மற்றும் ΔPQC ஆகியன வடிவொத்த முக்கோணங்கள்.

$$\frac{AB}{PQ} = \frac{BC}{QC}$$

$$\Rightarrow \frac{5}{x} = \frac{6}{3} = 2 \qquad \therefore \; x = \frac{5}{2}$$

$$= 2.5$$

3. $\Delta ABC \sim \Delta DEF$-ல், ΔABC-யின் பரப்பு 9செ.மீ^{2}, ΔDEF-யின் பரப்பு 16 செ.மீ^{2} மற்றும் $BC = 2.1$ செ.மீ எனில், EF-யின் நீளம் காண்க.

தீர்வு:



$\Delta \quad ABC \sim \Delta DEF$ என்க.

$$\frac{(\Delta ABC)\text{-ன் பரப்பளவு}}{(\Delta DEF)\text{-ன் பரப்பளவு}} = \frac{BC^2}{EF^2}$$

$$= \frac{AB^2}{DE^2} = \frac{AC^2}{DF^2}$$

$$\Rightarrow \quad \frac{9}{16} = \frac{(2.1)^2}{EF^2}$$

$$\Rightarrow \quad EF^2 = (2.1)^2 \times \frac{16}{9}$$

$$\Rightarrow \quad EF = 2.1 \times \frac{4}{3}$$

$$= 2.8 \text{ செ.மீ}$$

4. ΔABC-யின் பக்கங்கள் AB மற்றும் AC-ல் அமைந்த புள்ளிகள் முறையே D மற்றும் E மேலும், $AB = 5.6$ செ.மீ, $AD = 1.4$ செ.மீ, $AC = 7.2$ செ.மீ, மற்றும் $AE = 1.8$ செ.மீ, எனில், $DE \parallel BC$ எனக் காட்டுக.

தீர்வு:



$AB = 5.6$ செ.மீ, $AD = 1.4$ செ.மீ,

$AC = 7.2$ செ.மீ, $AE = 1.8$ செ.மீ

$BD = AB - AD = 5.6 - 1.4 = 4.2$ செ.மீ

$EC = AC - AE = 7.2 - 1.8 = 5.4$ செ.மீ

$$\frac{AD}{DB} = \frac{1.4}{4.2} = \frac{1}{3} \text{ மற்றும் } \frac{AE}{EC} = \frac{1.8}{5.4} = \frac{1}{3}$$

$$\frac{AD}{DB} = \frac{AE}{EC}.$$

$\therefore DE \parallel BC$

5. படத்தில் $\angle A$ -யின் இருசமவெட்டி AD ஆகும். $BD = 4$ செ.மீ, $DC = 3$ செ.மீ மற்றும் $AB = 6$ செ.மீ எனில், AC-யைக் காண்க.



தீர்வு:

ΔABC-யில், $\angle A$-யின் இருசமவெட்டி AD.

எனவே, கோண இருசமவெட்டித் தேற்றத்தின் படி,

$$\frac{BD}{DC} = \frac{AB}{AC}$$

$\frac{4}{3} = \frac{6}{AC}$ லிருந்து $4AC = 18$

எனவே, $AC = \frac{9}{2} = 4.5$ செ.மீ

---

6. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் AD என்பது $\angle BAC$ -யின் இருசம வெட்டியாகும். $AB = 10$ செ.மீ, $AC = 14$ செ.மீ மற்றும் $BC = 6$ செ.மீ எனில், BD மற்றும் DC ஐ காண்க.



தீர்வு:

AD என்பது $\angle BAC$ -ன் இருசமவெட்டியாகும்.

$AB = 10$ செ.மீ, $AC = 14$ செ.மீ, $BC = 6$ செ.மீ

கோண இருசமவெட்டி தேற்றப்படி,

$$\frac{BD}{DC} = \frac{AB}{AC}$$

$$\frac{x}{6-x} = \frac{10}{14}$$

$$\frac{x}{6-x} = \frac{5}{7}$$

$$7x = 30 - 5x$$

$$12x = 30$$

$$x = \frac{30}{12} = 2.5 \text{ செ.மீ}$$

$\therefore BD = 2.5$ செ.மீ $\quad DC = 3.5$ செ.மீ

---

7. ΔABC-யின் பக்கங்கள், AB மற்றும் AC யின் மீதுள்ள புள்ளிகள் முறையே D மற்றும் E ஆனது $DE \parallel BC$ என்றவாறு அமைந்துள்ளது.

(i) $\frac{AD}{DB} = \frac{3}{4}$ மற்றும் $AC = 15$ செ.மீ எனில் AE-யின் மதிப்பு காண்க.

(ii) $AD = 8x - 7$, $DB = 5x - 3$, $AE = 4x - 3$ மற்றும் $EC = 3x - 1$, எனில், x -ன் மதிப்பு காண்க.

தீர்வு:

i. $\frac{AD}{DB} = \frac{3}{4}$, $AC = 15$ செ.மீ

$AE = x$, $EC = 15 - x$

$DE \parallel BC$ தேல்ஸ் தேற்றப்படி,

$$\frac{AD}{DB} = \frac{AE}{EC} \Rightarrow \frac{3}{4} = \frac{x}{15-x}$$

$$3(15-x) = 4x$$

$$45 - 3x = 4x$$

$$45 = 7x$$

$$x = \frac{45}{7} = 6.43 \text{ செ.மீ}$$

---

ii. கொடுக்கப்பட்டவை:

$AD = 8x - 7$, $DB = 5x - 3$,

$AE = 4x - 3$, $EC = 3x - 1$

$DE \parallel BC$ தேல்ஸ் தேற்றப்படி

$$\frac{AD}{DB} = \frac{AE}{EC}$$

$$\Rightarrow \frac{8x-7}{5x-3} = \frac{4x-3}{3x-1}$$

$$\Rightarrow (8x-7)(3x-1) = (5x-3)(4x-3)$$

$$\Rightarrow 24x^2 - 29x + 7 = 20x^2 - 27x + 9$$

$$\Rightarrow 4x^2 - 2x - 2 = 0$$

$$\Rightarrow 2x^2 - x - 1 = 0$$

$$(2x+1)(x-1) = 0$$

$$x = 1, x = -\frac{1}{2}$$

$\therefore x = 1$

---

8. ΔABC-யில் D மற்றும் E என்ற புள்ளிகள் முறையே பக்கங்கள் AB மற்றும் AC ஆகியவற்றின் மீது அமைந்துள்ளன. பின்வருவனவற்றிற்கு $DE \parallel BC$ என நிறுவுக.

(i) $AB = 12$ செ.மீ, $AD = 8$ செ.மீ $AE = 12$ செ.மீ மற்றும் $AC = 18$ செ.மீ.

(ii) $AB = 5.6$ செ.மீ $AD = 1.4$ செ.மீ $AC = 7.2$ செ.மீ மற்றும் $AE = 1.8$ செ.மீ

தீர்வு:



i. $AB = 12$ செ.மீ, $AD = 8$ செ.மீ,
$AE = 12$ செ.மீ, $AC = 18$ செ.மீ

$\frac{AD}{AB} = \frac{8}{12} = \frac{2}{3}$ ----(1)

$\frac{AE}{AC} = \frac{12}{18} = \frac{2}{3}$ ----(2)

$(1), (2) \Rightarrow \frac{AD}{AB} = \frac{AE}{AC}$

$\therefore DE \parallel BC$

---

ii. $AB = 5.6$ செ.மீ, $AD = 1.4$ செ.மீ,
$AC = 7.2$ செ.மீ, $AE = 1.8$ செ.மீ

$\frac{AD}{AB} = \frac{1.4}{5.6} = \frac{1}{4}$ ----(1)

$\frac{AE}{AC} = \frac{1.8}{7.2} = \frac{1}{4}$ ----(2)

$(1), (2) \Rightarrow \frac{AD}{AB} = \frac{AE}{AC}$

$\therefore DE \parallel BC$

---

9. பின்வருவனவற்றுள் ΔABC-யில் AD ஆனது $\angle A$-யின் இருசமவெட்டி ஆகுமா எனச் சோதிக்கவும்.

(i) $AB = 5$ செ.மீ, $AC = 10$ செ.மீ, $BD = 1.5$ செ.மீ மற்றும் $CD = 3.5$ செ.மீ

(ii) $AB = 4$ செ.மீ, $AC = 6$ செ.மீ, $BD = 1.6$ செ.மீ மற்றும் $CD = 2.4$ செ.மீ

தீர்வு:



i. $AB = 5$ செ.மீ, $AC = 10$ செ.மீ,
$BD = 1.5$ செ.மீ, $CD = 3.5$ செ.மீ

$\frac{AB}{AC} = \frac{5}{10} = \frac{1}{2}$ ----(1)

$\frac{BD}{CD} = \frac{1.5}{3.5} = \frac{3}{7}$ ----(2)

$(1), (2) \Rightarrow \frac{AB}{AC} \neq \frac{BD}{CD}$

($\because$ கோண இருசமவெட்டி தேற்றப்படி)

$\angle A$ -ன் கோண இருசமவெட்டி AD அல்ல



ii. $AB = 4$ செ.மீ, $AC = 6$ செ.மீ,
$BD = 1.6$ செ.மீ, $CD = 2.4$ செ.மீ

$\frac{AB}{AC} = \frac{4}{6} = \frac{2}{3}$ ----(1)

$\frac{BD}{CD} = \frac{1.6}{2.4} = \frac{2}{3}$ ----(2)

$(1), (2) \Rightarrow \frac{AB}{AC} = \frac{BD}{CD}$

($\because$ கோண இருசமவெட்டி தேற்றப்படி)

$\angle A$ -ன் கோண இருசமவெட்டி AD ஆகும்.

5 மதிப்பெண்கள்

தேற்றம் 1

அடிப்படை விகிதசம தேற்றத்தை எழுதி நிறுவுக. (அல்லது) தேல்ஸ் தேற்றம்.



கூற்று:

ஓர் நேர்க்கோடு முக்கோணத்தின் ஒரு பக்கத்திற்கு இணையாகவும் மற்ற இரு பக்கங்களை வெட்டுமாறும் வரையப்பட்டால் அக்கோடு அவ்விரண்டு பக்கங்களையும் சம விகிதத்தில் பிரிக்கிறது.

நிரூபணம்:

கொடுக்கப்பட்டவை:

ΔABC-யில், AB-யின் மேலுள்ள புள்ளி D, AC-யின் மேல் உள்ள புள்ளி E ஆகும்.

நிரூபிக்க: $\frac{AD}{DB} = \frac{AE}{EC}$

அமைப்பு: $DE \parallel BC$ வரைக.

எண்	கூற்று	காரணம்
1.	$\angle ABC = \angle ADE = \angle 1$	ஒத்த கோணங்கள் சமம். ஏனெனில் $DE \parallel BC$

2.	$\angle ACB = \angle AED = \angle 2$	ஒத்த கோணங்கள் சமம். ஏனெனில் $DE \parallel BC$
3.	$\angle DAE = \angle BAC = \angle 3$	இரு முக்கோணங்களும் ஒரு பொதுவான கோணத்தைக் கொண்டுள்ளது.
	$\Delta ABC \sim \Delta ADE$	AAA விதிமுறைபடி
	$\frac{AB}{AD} = \frac{AC}{AE}$	ஒத்த பக்கங்கள் விகிதச் சமம்.
	$\frac{AD+DB}{AD} = \frac{AE+EC}{AE}$	D மற்றும் E-ஐப் பயன்படுத்தி AB மற்றும் AC-ஐப் பிரித்தல்
	$1+\frac{DB}{AD} = 1+\frac{EC}{AE}$	சுருக்குதல்
	$\frac{DB}{AD} = \frac{EC}{AE}$	இரு பக்கங்களிலும் 1-ஐ நீக்குக.
	$\frac{AD}{DB} = \frac{AE}{EC}$	தலைகீழாக மாற்றுக
	தேற்றம் நிரூபிக்கப்பட்டது	

தேற்றம் 2

கோண இருசமவெட்டி தேற்றத்தை எழுதி நிறுவுக. (Angle Bisector Theorem)

கூற்று:

ஒரு முக்கோணத்தின் ஒரு கோணத்தின் உட்புற இருசமவெட்டியானது அக்கோணத்தின் எதிர்பக்கத்தை உட்புறமாக அக்கோணத்தினை அடக்கிய பக்கங்களின் விகிதத்தில் பிரிக்கும்.



கொடுக்கப்பட்டவை:

ΔABC-யில், AD-யானது $\angle A$-யின் உட்புற இருசமவெட்டி

நிரூபிக்க: $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$

அமைப்பு:

AB-க்கு இணையாக C வழியாக ஒரு இணைகோடு வரைக. AD யின் நீட்சியானது C வழியாக செல்லும் கோட்டினை E-யில் சந்திக்கிறது.

எண்	கூற்று	காரணம்
1.	$\angle AEC = \angle BAE = \angle 1$	ஒரு குறுக்கு வெட்டியானது இரண்டு இணைகோடுகளை வெட்டுவதால் ஏற்படும் ஒன்றுவிட்ட கோணங்கள் சமம்.
2.	ΔACE என்பது இருசமபக்க முக்கோணம் $AC = CE$ .... (1)	ΔACE-யில் $\angle CAE = \angle CEA$.
3.	$\Delta ABD \sim \Delta ECD$ $\frac{AB}{CE} = \frac{BD}{CD}$	AA விதிமுறைபடி
4.	$\frac{AB}{AC} = \frac{BD}{CD}$	(1) லிருந்து $AC = CE$ தேற்றம் நிரூபிக்கப்பட்டது.

தேற்றம் 3

பிதாகரஸ் தேற்றத்தை எழுதி நிறுவுக. *(Pythagoras Theorem)*

கூற்று:

ஒரு செங்கோண முக்கோணத்தில் கர்ணத்தின் வர்க்கம் மற்ற இரு பக்கங்களின் வர்க்கங்களின் கூடுதலுக்குச் சமம்.



நிருபணம்:

கொடுக்கப்பட்டது: ΔABC, $\angle A = 90°$

நிரூபிக்க: $AB^2 + AC^2 = BC^2$

அமைப்பு: $AD \perp BC$ வரைக.

எண்	கூற்று	காரணம்
1.	ΔABC மற்றும் ΔABD -ஐ ஒப்பிடுக.	$\angle BAC = 90°$ கொடுக்கப்பட்டது மற்றும்
	$\angle B$ பொதுவானது	$\angle BDA = 90°$ அமைப்பிலிருந்து
	$\angle BAC = \angle BDA = 90°$	
	எனவே, $\Delta ABC \sim \Delta ABD$	AA விதிமுறைபடி
	$\frac{AB}{BD} = \frac{BC}{AB}$ $AB^2 = BC \times BD$ ... (1)	
2.	ΔABC மற்றும் ΔADC -ஐ ஒப்பிடுக.	$\angle BAC = 90°$ கொடுக்கப்பட்டது மற்றும்
	$\angle C$ பொதுவானது	$\angle CDA = 90°$ அமைப்பிலிருந்து
	$\angle BAC = \angle ADC = 90°$	
	எனவே, $\Delta ABC \sim \Delta ADC$	AA விதிமுறைபடி
	$\frac{BC}{AC} = \frac{AC}{DC}$ $AC^2 = BC \times DC$ ... (2)	

(1) மற்றும் (2)-ஐக் கூட்ட நாம் பெறவது

$$AB^2 + AC^2 = BC \times BD + BC \times DC$$
$$= BC(BD + DC)$$
$$AB^2 + AC^2 = BC \times BC = BC^2$$

தேற்றம் நிரூபிக்கப்பட்டது.

4. ஒரு முக்கோணத்தின் நடுக்கோடுகள் ஒரு புள்ளி வழிச் செல்லும் எனக் காட்டுக.



ΔABC யில்

BC-ன் நடுப்புள்ளி D. எனவே,

$BD = DC$. அதாவது $\frac{BD}{DC} = 1$ ----(1)

CA-ன் நடுப்புள்ளி E. எனவே,

$CE = EA$. அதாவது $\frac{CE}{EA} = 1$ ----(2)

AB-ன் நடுப்புள்ளி F. எனவே

$AF = FB$. அதாவது $\frac{AF}{FB} = 1$ ----(3)

(1), (2) மற்றும் (3)-ஐ பெருக்க நாம் பெறுவது

$$\frac{BD}{DC} \times \frac{CE}{EA} \times \frac{AF}{FB} = 1 \times 1 \times 1 = 1$$

எனவே சீவாஸ் தேற்றம் நிரூபிக்கப்பட்டது.

ஆகையால், நடுக்கோடுகள் ஒரு புள்ளி வழிச் செல்கின்றன.

★★★

எண்	கூற்று	காரணம்
1.	ΔABC மற்றும் ΔABD -ஐ ஒப்பிடுக. $\angle B$ பொதுவானது $\angle BAC = \angle BDA = 90°$ எனவே, $\Delta ABC \sim \Delta ABD$ $\frac{AB}{BD} = \frac{BC}{AB}$ $AB^2 = BC \times BD$ ... (1)	$\angle BAC = 90°$ கொடுக்கப்பட்டது மற்றும் $\angle BDA = 90°$ அமைப்பிலிருந்து AA விதிமுறைபடி
2.	ΔABC மற்றும் ΔADC -ஐ ஒப்பிடுக. $\angle C$ பொதுவானது $\angle BAC = \angle ADC = 90°$ எனவே, $\Delta ABC \sim \Delta ADC$ $\frac{BC}{AC} = \frac{AC}{DC}$ $AC^2 = BC \times DC$ ... (2)	$\angle BAC = 90°$ கொடுக்கப்பட்டது மற்றும் $\angle CDA = 90°$ அமைப்பிலிருந்து AA விதிமுறைபடி

(1) மற்றும் (2)-ஐக் கூட்ட நாம் பெறவது

$$AB^2 + AC^2 = BC \times BD + BC \times DC$$
$$= BC(BD + DC)$$
$$AB^2 + AC^2 = BC \times BC = BC^2$$

தேற்றம் நிரூபிக்கப்பட்டது.

4. ஒரு முக்கோணத்தின் நடுக்கோடுகள் ஒரு புள்ளி வழிச் செல்லும் எனக் காட்டுக.



ΔABC யில்

BC-ன் நடுப்புள்ளி D. எனவே,

$BD = DC$. அதாவது $\frac{BD}{DC} = 1$ ----(1)

CA-ன் நடுப்புள்ளி E. எனவே,

$CE = EA$. அதாவது $\frac{CE}{EA} = 1$ ----(2)

AB-ன் நடுப்புள்ளி F. எனவே

$AF = FB$. அதாவது $\frac{AF}{FB} = 1$ ----(3)

(1), (2) மற்றும் (3)-ஐ பெருக்க நாம் பெறுவது

$$\frac{BD}{DC} \times \frac{CE}{EA} \times \frac{AF}{FB} = 1 \times 1 \times 1 = 1$$

எனவே சீவாஸ் தேற்றம் நிரூபிக்கப்பட்டது.

ஆகையால், நடுக்கோடுகள் ஒரு புள்ளி வழிச் செல்கின்றன.

★★★

8 மதிப்பெண்கள்

1. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR-க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{3}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.
(அளவு காரணி $_ < 1$)

தீர்வு:



உதவிப்படம்



2. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR -க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{4}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.
(அளவு காரணி (அளவு காரணி $\frac{7}{4} > 1$)

தீர்வு:



உதவிப்படம்



3. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{2}{3}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.
(அளவு காரணி $\frac{2}{3} < 1$).

தீர்வு:



4. கொடுக்கப்பட்ட முக்கோணம் LMN -ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{4}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.
(அளவு காரணி $\frac{4}{5} < 1$).

தீர்வு:



5. கொடுக்கப்பட்ட முக்கோணம் ABC-யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{6}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.
(அளவு காரணி $\frac{6}{5} > 1$).

தீர்வு:



6. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR -ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{3}$ என்றவாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.
(அளவு காரணி $\frac{7}{3} > 1$).

தீர்வு:



7. 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மேல் P என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளி வழியே தொடுகோடு வரையவும்.

தீர்வு:

ஆரம் r = 3 செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

உதவிப்படம்





8. 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மீதுள்ள L என்ற புள்ளி வழியாக மாற்று வட்டத்துண்டு தேற்றத்தைப் பயன்படுத்தி வட்டத்திற்குத் தொடுகோடு வரையவும்.

தீர்வு:

உதவிப்படம்





9. 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து, 8 செ.மீ தொலைவில் P என்ற புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து PA மற்றும் PB என்ற இரு தொடுகோடுகள் வரைந்து அவற்றின் நீளங்களை அளவிடுக.

தீர்வு:

உதவிப்படம்





தொடுகோட்டின் நீளம் $PA = PB = 7.4$ செ.மீ

சரிபார்த்தல்:

செங்கோண முக்கோணம் OPA-யில்

$PA^2 - OA^2 = 64 - 9 = 55$

$PA = \sqrt{55} = 7.4$ செ.மீ (தோராயமாக)

10. P ஐ மையமாகக் கொண்ட 3.4 செ.மீ ஆரமுள்ள ஒரு வட்டத்திற்கு R என்ற புள்ளியில் தொடுகோடு வரையவும்.

தீர்வு:

உதவிப்படம்





11. 4.5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மீது ஏதேனும் ஒரு புள்ளிக்கு மாற்று வட்டத்துண்டு தேற்றத்தினைப் பயன்படுத்தித் தொடுகோடு வரையவும்.

தீர்வு:



12. 5செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 10 செ.மீ தொலைவிலுள்ள புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும். மேலும் தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக. **செப்.20**

தீர்வு:

உதவிப்படம்





சரிபார்த்தல்:

செங்கோண முக்கோணம் OPA இல்

$PA^2 = OP^2 - OA^2 = 10^2 - 5^2 = 100 - 25 = 75$

$PA = \sqrt{75} = 8.6$ செ.மீ (தோராயமாக)

13. 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்து அதன் மையத்திலிருந்து 11 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறித்து, அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்கு இரண்டு தொடுகோடுகள் வரையவும்.

தீர்வு:

உதவிப்படம்





சரிபார்த்தல்:

செங்கோண முக்கோணம் ΔOPA இல்

$AP^2 = OP^2 - OA^2$

$= 11^2 - 4^2 = 121 - 16 = 105$

$AP = \sqrt{105} = 10.2$ செ.மீ

14. 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 5 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைந்து தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக.

தீர்வு:

உதவிப்படம்





சரிபார்த்தல்:

செங்கோண முக்கோணம் ΔOPA இல்

$AP^2 = OP^2 - OA^2$

$= 5^2 - 3^2 = 25 - 9 = 16$

$AP = \sqrt{16} = 4$ செ.மீ

15. O-வை மையமாகக் கொண்ட 3.6 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மையத்திலிருந்து 7.2 செ.மீ தொலைவிலுள்ள P என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும்.

தீர்வு:

உதவிப்படம்





சரிபார்த்தல்:

செங்கோண முக்கோணம் OPA இல்

$PA^2 = OP^2 - OA^2 = 7.2^2 - 3.6^2$

$= 51.84 - 12.96 = 38.88$

$PA = \sqrt{38.88} = 6.2$ செ.மீ (தோராயமாக)

★★★

5. ஆயத்தொலைவு வடிவியல்

2 மதிப்பெண்கள்

1. (−3, 5), (5, 6) மற்றும் (5, −2) ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட முக்கோணத்தின் பரப்பைக் காண்க.

தீர்வு:



$A(-3, 5)$, $B(5, -2)$, $C(5,6)$

$\downarrow \quad \downarrow \quad \downarrow$

$x_1y_1 \quad x_2y_2 \quad x_3y_3$

$$\Delta \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -3 & 5 \\ 5 & -2 \\ 5 & 6 \\ -3 & 5 \end{vmatrix}$$

$= \frac{1}{2}[(6+30+25)-(25-10-18)]$

$= \frac{1}{2}[6+30+25-25+10+18]$

$= \frac{1}{2}[6+30+10+18]$

$= \frac{1}{2}[64] = 32$ ச.அலகுகள்

2. $P(-1.5, 3)$, $Q(6, -2)$, மற்றும் $R(-3, 4)$ ஆகிய புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையும் எனக் காட்டுக.

தீர்வு:

ΔPQR ன் பரப்பு = 0

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = 0 \Rightarrow \frac{1}{2}\begin{vmatrix} -1.5 & 3 \\ 6 & -2 \\ -3 & 4 \\ -1.5 & 3 \end{vmatrix} = 0$$

$$\frac{1}{2}[(3+24-9)-(18+6-6)] = 0$$

$$\frac{1}{2}[3+24-9-18-6+6] = 0$$

$$\frac{1}{2}[27-(27)] = 0$$

$$\frac{1}{2}[0] = 0$$

$\therefore$ கொடுக்கப்பட்ட மூன்று புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையும்.

---

3. $A(-1, 2)$, $B(k, -2)$ மற்றும் $C(7, 4)$ ஆகியவற்றை வரிசையான முனைப் புள்ளிகளாகக் கொண்ட முக்கோணத்தின் பரப்பு 22 சதுர அலகுகள் எனில், k-யின் மதிப்புக் காண்க.

தீர்வு:

$A(-1, 2)$, $B(k, -2)$ மற்றும் $C(7, 4)$ ஆகியன முனைப்புள்ளிகள் ஆகும்.

ΔABC -யின் பரப்பு 22 சதுர அலகுகள்

$$\frac{1}{2}\begin{vmatrix} -1 & 2 \\ k & -2 \\ 7 & 4 \\ -1 & 2 \end{vmatrix} = 22 \Rightarrow \begin{vmatrix} -1 & 2 \\ k & -2 \\ 7 & 4 \\ -1 & 2 \end{vmatrix} = 44$$

$$\{(2+4k+14)-(2k-14-4)\} = 44$$

$$2+4k+14-2k+14+4 = 44$$

$$2k+34 = 44$$

$$2k = 44-34$$

$$2k = 10$$

எனவே $k = \frac{10}{2} = 5$

---

4. கீழ்க்கண்ட புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு காண்க.

தீர்வு:

i. $(1, -1)$, $(-4, 6)$ மற்றும் $(-3, -5)$

$$\Delta \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 1 & -1 \\ -4 & 6 \\ -3 & -5 \\ 1 & -1 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(6+20+3)-(4-18-5)]$$

$$= \frac{1}{2}[6+20+3-4+18+5]$$

$$= \frac{1}{2}[(6+20+3+18+5)-4]$$

$$= \frac{1}{2}[52-4]$$

$$= \frac{1}{2}[48] = 24 \text{ ச.அ}$$

---

ii. $(-10, -4)$, $(-8, -1)$ மற்றும் $(-3, -5)$

தீர்வு:

$$\Delta \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -10 & -4 \\ -8 & -1 \\ -3 & -5 \\ -10 & -4 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(10+40+12)-(32+3+50)]$$

$$= \frac{1}{2}[62-85]$$

$$= \frac{1}{2}[-23] = -11.5 \text{ ச.அ}$$

$\therefore$ முக்கோணத்தின் பரப்பு = 11.5 ச.அ

---

5. கீழ்க்காணும் புள்ளிகள் ஒரே நேர்க்கோட்டில் அமையுமா எனத் தீர்மானிக்கவும்.

i) $\left(-\frac{1}{2}, 3\right)$ $(-5, 6)$ மற்றும் $(-8, 8)$

தீர்வு:

$\left(-\frac{1}{2}, 3\right)$ $(-5, 6)$ மற்றும் $(-8, 8)$

$$\Delta \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -\frac{1}{2} & 3 \\ -5 & 6 \\ -8 & 8 \\ -\frac{1}{2} & 3 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(-3-40-24)-(-15-48-4)]$$

$$= \frac{1}{2}[(-67)-(-67)] = 0$$

$\therefore$ கொடுக்கப்பட்ட மூன்று புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையும்.

---

ii. $(a, b+c)$, $(b, c+a)$ மற்றும் $(c, a+b)$

தீர்வு:

$$\Delta \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} a & b+c \\ b & c+a \\ c & a+b \\ a & b+c \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(ac + a^2 + ab + b^2 + bc + c^2) - (b^2 + bc + c^2 + ca + a^2 + ab)]$$

$$= \frac{1}{2}[ac + a^2 + ab + b^2 + bc + c^2 - b^2 - bc - c^2 - ca - a^2 - ab]$$

$$= \frac{1}{2}[0] = 0$$

மாற்றுமுறை:

$(a, b+c)$, $(b, c+a)$, $(c, a+b)$

x_1, y_1 x_2, y_2 x_3, y_3

$$\Delta \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 - x_2 & x_1 - x_3 \\ y_1 - y_2 & y_1 - y_3 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\begin{vmatrix} a-b & a-c \\ b+c-c-a & b+c-a-b \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\begin{vmatrix} a-b & a-c \\ -(a-b) & -(a-c) \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(a-b)(a-c) + (a-b)(a-c)]$$

$$= \frac{1}{2}[0] = 0$$

$\therefore$ கொடுக்கப்பட்ட மூன்று புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையும்.

6. வரிசையில் அமைந்த முக்கோணத்தின் முனைப்புள்ளிகளும், அதன் பரப்பளவுகளும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. 'p' -யின் மதிப்பைக் காண்க.

எண்	முனைப் புள்ளிகள்	பரப்பு (சதுர அலகில்)
(i)	(0, 0), (p, 8), (6, 2)	20
(ii)	(p, p), (5, 6), (5, −2)	32

தீர்வு:

i. $A(0, 0), B(p, 8), C(6, 2)$

ΔABCன் பரப்பு = 20 ச.அ

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = 20 \Rightarrow \frac{1}{2}\begin{vmatrix} 0 & 0 \\ p & 8 \\ 6 & 2 \\ 0 & 0 \end{vmatrix} = 20$$

$$(0+2p+0) - (0+48+0) = 40$$
$$2p - 48 = 40$$
$$2p = 88$$
$$p = 44$$

ii. $A(p, p), B(5, 6), C(5, -2)$

Δன் பரப்பு = 32 ச.அ

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = 32 \Rightarrow \frac{1}{2}\begin{vmatrix} p & p \\ 5 & 6 \\ 5 & -2 \\ p & p \end{vmatrix} = 32$$

$$\begin{vmatrix} p & p \\ 5 & 6 \\ 5 & -2 \\ p & p \end{vmatrix} = 64$$

$$(6p - 10 + 5p) - (5p + 30 - 2p) = 64$$
$$6p - 10 + 5p - 5p - 30 + 2p = 64$$
$$8p - 40 = 64$$
$$\Rightarrow 8p = 64 + 40$$
$$8p = 104$$
$$\Rightarrow p = \frac{104}{8}$$
$$\Rightarrow p = 13$$

7. கொடுக்கப்பட்ட புள்ளிகள் ஒரு கோட்டில் அமைந்தவை எனில், 'a' -யின் மதிப்பைக் காண்க.

(2, 3), (4, a) மற்றும் (6, −3)

தீர்வு:

$\Delta = 0$ ச.அ

$$\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = 0 \Rightarrow \begin{vmatrix} 2 & 3 \\ 4 & a \\ 6 & -3 \\ 2 & 3 \end{vmatrix} = 0$$

$$[(2a - 12 + 18) - (12 + 6a - 6)] = 0$$
$$2a - 12 + 18 - 12 - 6a + 6 = 0$$
$$-4a = 0$$
$$\therefore a = 0$$

5 மதிப்பெண்கள்

1. ஓர் அறையின் தளமானது ஒரே மாதிரியான முக்கோண வடிவத் தரை ஓடுகளைக் கொண்டு (tiles) அமைக்கப்படுகிறது. அதில் ஓர் ஓட்டின் முனைகள் (−3, 2), (−1, −1) மற்றும் (1, 2) ஆகும். தரைத்தளத்தை முழுமையாக அமைக்க 110 ஓடுகள் தேவைப்படுகின்றது. எனில் அதன் பரப்பைக் காண்க.

தீர்வு:

ஓர் ஓட்டின் முனைப் புள்ளிகள் (−3, 2), (−1, −1) மற்றும் (1, 2) ஆகும்.

$$\Delta \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} -3 & 2 \\ -1 & -1 \\ 1 & 2 \\ -3 & 2 \end{vmatrix}$$

ஓட்டின் பரப்பு $= \frac{1}{2}\{(3-2+2)-(-2-1-6)\}$

$= \frac{1}{2}[3-(-9)] = \frac{1}{2}[3+9]$

$= \frac{1}{2}(12) = 6$ ச.அலகுகள்

தரைத்தளமானது ஒரே மாதிரியான110 ஓடுகளால் நிரப்பப்படுவதால்,

தரைத்தளத்தின் பரப்பு $= 110 \times 6$

$= 660$ ச.அலகுகள்

2. (8, 6), (5, 11), (–5, 12) மற்றும் (–4, 3) ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

தீர்வு:



நாற்கரத்தின் பரப்பைக் காண்பதற்கு முன்பாக கொடுக்கப்பட்ட புள்ளிகளை வரைபடத்தில் குறிக்க வேண்டும்.

A (8, 6), B (5, 11), C (–5, 12) மற்றும் D (–4, 3) என்பன முனைப் புள்ளிகள் ஆகும். எனவே, நாற்கரம் $ABCD$-யின் பரப்பு

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 8 & 6 \\ 5 & 11 \\ -5 & 12 \\ -4 & 3 \\ 8 & 6 \end{vmatrix}$$

$= \frac{1}{2}[(88+60-15-24)-(30-55-48+24)]$

$= \frac{1}{2}[88+60-15-24-30+55+48-24]$

$= \frac{1}{2}[88+60+55+48-15-24-30-24]$

$= \frac{1}{2}[251-93]$

$= \frac{1}{2}[158] = 79$ ச.அலகுகள்

3. கொடுக்கப்பட்ட படமானது ஒரு வளாகத்தில் புதிய வாகன நிறுத்தம் ஏற்படுத்த அமைக்கப்பட்ட பகுதியைக் காட்டுகிறது. இதை அமைப்பதற்கு ஒரு சதுர அடிக்கு ₹1300 செலவாகும் என மதிப்பிடப்படுகிறது எனில், வாகன நிறுத்தம் ஏற்படுத்துவதற்குத் தேவையான மொத்தச் செலவைக் கணக்கிடவும்.

தீர்வு:



A (2, 2), B (5, 5), C (4, 9) மற்றும் D (1, 7) என்பது நாற்கர வடிவ வாகன நிறுத்தத்தின் முனைப் புள்ளிகள் ஆகும்.

எனவே, வாகன நிறுத்தத்தின் பரப்பு

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 2 & 2 \\ 5 & 5 \\ 4 & 9 \\ 1 & 7 \\ 2 & 2 \end{vmatrix}$$

$= \frac{1}{2}[(10+45+28+2)-(10+20+9+14)]$

$= \frac{1}{2}[85-53] = \frac{1}{2}[32] = 16$ சதுர அடிகள்

எனவே, வாகன நிறுத்தத்தின் பரப்பு= 16 சதுர அடிகள்.

ஒரு சதுர அடி அமைக்க ஆகும் செலவு = ₹1300

ஆகையால், வாகன நிறுத்தம் அமைக்க ஆகும் மொத்தச் செலவு $= 16 \times 1300 =$ ₹ 20800

4. கொடுக்கப்பட்ட புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

தீர்வு:

(i) (–9, –2), (–8, –4), (2, 2) மற்றும் (1, –3)



A (–9, –2), B (–8, –4), C (1, –3), D (2, 2) என்க.

நாற்கரத்தின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -9 & -2 \\ -8 & -4 \\ 1 & -3 \\ 2 & 2 \\ -9 & -2 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\,[(36+24+2-4)-(16-4-6-18)]$$

$$= \frac{1}{2}\,[(36+24+2+4+6+18)-(4+16)]$$

$$= \frac{1}{2}\,[90-(20)] = \frac{1}{2}\,[70] = 35 \text{ ச.அ}$$

ii. (–9, 0), (–8, 6), (–1, –2) மற்றும் (–6, –3)



$A\,(-8, 6)$, $B\,(-9, 0)$, $C\,(-6, -3)$, $D\,(-1, -2)$

நாற்கரத்தின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -8 & 6 \\ -9 & 0 \\ -6 & -3 \\ -1 & -2 \\ -8 & 6 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(0+27+12-6)-(-54+0+3+16)]$$

$$= \frac{1}{2}\,[27+12-6+54-3-16]$$

$$= \frac{1}{2}[(27+12+54)-(6+3+16)]$$

$$= \frac{1}{2}\,[93-25] = \frac{1}{2}[68] = 34 \text{ ச.அ}$$

மாற்றுமுறை:

$A(-8, 6)$, $B(-9, 0)$, $C(-6, -3)$, $D(-1, -2)$

x_1, y_1 x_2, y_2 x_3, y_3 x_4, y_4

நாற்கரத்தின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 - x_3 & x_2 - x_4 \\ y_1 - y_3 & y_2 - y_4 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\begin{vmatrix} -8-(-6) & -9-(-1) \\ 6-(-3) & 0-(-2) \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\begin{vmatrix} -8+6 & -9+1 \\ 6+3 & 0+2 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -2 & -8 \\ 9 & 2 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\,[-4+72] = \frac{1}{2}\,[68] = 34 \text{ ச.அலகுகள்}$$

5. (–4, –2), (*k* –3), (3, –2) மற்றும் (2, 3) ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பு 28 ச.அலகுகள் எனில், *k*-யின் மதிப்புக் காண்க.

தீர்வு:

$$\frac{1}{2}\begin{vmatrix} -4 & -2 \\ -3 & k \\ 3 & -2 \\ 2 & 3 \\ -4 & -2 \end{vmatrix} = 28$$

$\Rightarrow (-4\,k+6+9-4)-(6+3k-4-12) = 56$

$\Rightarrow \quad -4k+\not{6}+9-\not{4}-\not{6}-3k+\not{4}+12 = 56$

$\Rightarrow \quad -7k+21 = 56$

$\Rightarrow \quad -7k = 56-21$

$\Rightarrow \quad -7k = 35$

$\Rightarrow \quad k = \dfrac{35}{-7} = -5$

மாற்றுமுறை:

$(4, -2)$, $(-3, k)$, $(3, -2)$, $(2, 3)$

x_1, y_1 x_2, y_2 x_3, y_3 x_4, y_4

நாற்கரத்தின் பரப்பு

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = 28$$

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 - x_3 & x_2 - x_4 \\ y_1 - y_3 & y_2 - y_4 \end{vmatrix} = 28$$

$$\frac{1}{2}\begin{vmatrix} -4-3 & -3-2 \\ -2-(-2) & k-3 \end{vmatrix} = 28$$

$$\begin{vmatrix} -7 & -5 \\ 0 & k-3 \end{vmatrix} = 56$$

$$-7(k-3)+0 = 56$$

$$-7k+21 = 56$$

$$-7k = 56-21$$

$$-7k = 35$$

$$k = \frac{35}{-7} = -5$$

நாற்கரத்தின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -9 & -2 \\ -8 & -4 \\ 1 & -3 \\ 2 & 2 \\ -9 & -2 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(36+24+2-4)-(16-4-6-18)]$$

$$= \frac{1}{2}[(36+24+2+4+6+18)-(4+16)]$$

$$= \frac{1}{2}[90-(20)] = \frac{1}{2}[70] = 35 \text{ ச.அ}$$

ii. (−9, 0), (−8, 6), (−1, −2) மற்றும் (−6, −3)



$A\,(-8, 6)$, $B\,(-9, 0)$, $C\,(-6, -3)$, $D\,(-1, -2)$

நாற்கரத்தின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -8 & 6 \\ -9 & 0 \\ -6 & -3 \\ -1 & -2 \\ -8 & 6 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[(0+27+12-6)-(-54+0+3+16)]$$

$$= \frac{1}{2}[27+12-6+54-3-16]$$

$$= \frac{1}{2}[(27+12+54)-(6+3+16)]$$

$$= \frac{1}{2}[93-25] = \frac{1}{2}[68] = 34 \text{ ச.அ}$$

மாற்றுமுறை:

$A(-8, 6)$, $B(-9, 0)$, $C(-6, -3)$, $D(-1, -2)$

x_1, y_1 $\quad x_2, y_2$ $\quad x_3, y_3$ $\quad x_4, y_4$

நாற்கரத்தின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 - x_3 & x_2 - x_4 \\ y_1 - y_3 & y_2 - y_4 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\begin{vmatrix} -8-(-6) & -9-(-1) \\ 6-(-3) & 0-(-2) \end{vmatrix}$$

$$= \frac{1}{2}\begin{vmatrix} -8+6 & -9+1 \\ 6+3 & 0+2 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -2 & -8 \\ 9 & 2 \end{vmatrix}$$

$$= \frac{1}{2}[-4+72] = \frac{1}{2}[68] = 34 \text{ ச.அலகுகள்}$$

5. (−4, −2), (k −3), (3, −2) மற்றும் (2, 3) ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பு 28 ச.அலகுகள் எனில், k-யின் மதிப்புக் காண்க.

தீர்வு:

$$\frac{1}{2}\begin{vmatrix} -4 & -2 \\ -3 & k \\ 3 & -2 \\ 2 & 3 \\ -4 & -2 \end{vmatrix} = 28$$

$$\Rightarrow (-4k+6+9-4)-(6+3k-4-12) = 56$$

$$\Rightarrow -4k+6+9-4-6-3k+4+12 = 56$$

$$\Rightarrow -7k+21 = 56$$

$$\Rightarrow -7k = 56-21$$

$$\Rightarrow -7k = 35$$

$$\Rightarrow k = \frac{35}{-7} = -5$$

மாற்றுமுறை:

(4, −2), (−3, k), (3, −2), (2, 3)

x_1, y_1 $\quad x_2, y_2$ $\quad x_3, y_3$ $\quad x_4, y_4$

நாற்கரத்தின் பரப்பு

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = 28$$

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 - x_3 & x_2 - x_4 \\ y_1 - y_3 & y_2 - y_4 \end{vmatrix} = 28$$

$$\frac{1}{2}\begin{vmatrix} -4-3 & -3-2 \\ -2-(-2) & k-3 \end{vmatrix} = 28$$

$$\begin{vmatrix} -7 & -5 \\ 0 & k-3 \end{vmatrix} = 56$$

$$-7(k-3)+0 = 56$$

$$-7k+21 = 56$$

$$-7k = 56-21$$

$$-7k = 35$$

$$k = \frac{35}{-7} = -5$$

6. $A(-3, 9), B(a, b)$ மற்றும் $C(4, -5)$ என்பன ஒரு கோடமைந்த புள்ளிகள் மற்றும் if $a + b = 1$ எனில், a மற்றும் b-யின் மதிப்பைக் காண்க.

தீர்வு:

$A(-3, 9), B(a, b), C(4, -5)$ என்பன ஒரு கோட்டமைந்த புள்ளிகள் மற்றும்

$a + b = 1$ ----(1)

ஒரே கோட்டமைந்த 3 புள்ளிகள் கொண்ட முக்கோணத்தின் பரப்பு = 0

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -3 & 9 \\ a & b \\ 4 & -5 \\ -3 & 9 \end{vmatrix} = 0$$

$\Rightarrow (-3b - 5a + 36) - (9a + 4b + 15) = 0$

$\Rightarrow -5a - 3b + 36 - 9a - 4b - 15 = 0$

$\Rightarrow -14a - 7b + 21 = 0$

$\Rightarrow -14a - 7b = -21$

$\Rightarrow 14a + 7b = 21\ (\div 7)$

$\Rightarrow 2a + b = 3$ ----(2)

கொடுக்கப்பட்டுள்ளது $a + b = 1$ ----(1)

$(1) - (2) \Rightarrow a = 2 \quad b = -1$

---

7. $A(-5,-4)$, $B(1,6)$ மற்றும் $C(7,-4)$ ஆகியவற்றை முனைப் புள்ளிகளாகக் கொண்ட முக்கோண வடிவக் கண்ணாடிக்கு வர்ணம் பூசப்படுகிறது. 6 சதுர அடி பரப்புக்கு வர்ணம் பூச ஒரு வாளி தேவைப்படுகிறது எனில் கண்ணாடியின் முழுப் பகுதியையும் ஒரு முறை வர்ணம் பூச எத்தனை வாளிகள் தேவைப்படும்?

தீர்வு:

தேவையான வாளிகளின் பரப்பளவு = $\dfrac{\Delta ABC\text{-ன் பரப்பளவு}}{\text{ஒரு வாளியினால் வர்ணம் பூசப்படும் பகுதியின் பரப்பளவு}}$

ΔABC-ன் பரப்பளவு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} \Rightarrow \frac{1}{2}\begin{vmatrix} -5 & -4 \\ 1 & 6 \\ 7 & -4 \\ -5 & -4 \end{vmatrix}$$

$= \frac{1}{2}[(-30 - 4 - 28) - (-4 + 42 + 20)]$

$= \frac{1}{2}[-30 - 4 - 28 + 4 - 42 - 20] = \frac{1}{2}[-120]$

$= +60$ ச.அ

$\therefore$ வாளிகளின் எண்ணிக்கை $= \frac{60}{6} = 10$

★★★

8. புள்ளியலும் நிகழ்தகவும்

2 மதிப்பெண்கள்

1. கொடுக்கப்பட்ட தரவுப் புள்ளிகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக்கெழு ஆகியவற்றைக் காண்க. 25, 67, 48, 53, 18, 39, 44.

தீர்வு:

மிகப் பெரிய மதிப்பு $L = 67$;

மிகச் சிறிய மதிப்பு $S = 18$

வீச்சு $R = L - S = 67 - 18 = 49$

வீச்சுக்கெழு $= \dfrac{L - S}{L + S}$

வீச்சுக்கெழு $= \dfrac{67 - 18}{67 + 18} = \dfrac{49}{85} = 0.576$

---

2. கொடுக்கப்பட்ட பரவலின் வீச்சு காண்க.

வயது (வருடங்களில்)	16-18	18-20	20-22	22-24	24-26	26-28
மாணவர்களின் எண்ணிக்கை	0	4	6	8	2	2

தீர்வு:

இங்கு மிகப் பெரிய மதிப்பு $L = 28$

மிகச் சிறிய மதிப்பு $S = 18$

வீச்சு $R = L - S \Rightarrow R = 28 - 18$

$\Rightarrow = 10$ வருடங்கள்

---

3. ஒரு தரவின் வீச்சு 13.67 மற்றும் மிகப் பெரிய மதிப்பு 70.08 எனில் மிகச் சிறிய மதிப்பைக் காண்க.

தீர்வு:

வீச்சு, $R = 13.67$

மிகப் பெரிய மதிப்பு $L = 70.08$

வீச்சு, $R = L - S$

$13.67 = 70.08 - S$

$S = 70.08 - 13.67$

$= 56.41$

எனவே, மிகச் சிறிய மதிப்பு 56.41

---

4. கீழ்க்காணும் தரவுகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக் கெழுவைக் காண்க.

(i) 63, 89, 98, 125, 79, 108, 117, 68

(ii) 43.5, 13.6, 18.9, 38.4, 61.4, 29.8

தீர்வு:

i. 63, 89, 98, 125, 79, 108, 117, 68

$L = 125, S = 63$

வீச்சு, $R = L - S = 125 - 63 = 62$

வீச்சுக்கெழு $= \frac{L-S}{L+S}$

$= \frac{125-63}{125+63} = \frac{62}{188}$

$= 0.33$

ii. **43.5, 13.6, 18.9, 38.4, 61.4, 29.8**

$L = 61.4, S = 13.6$

வீச்சு, $R = L - S = 61.4 - 13.6 = 47.8$

வீச்சுக்கெழு $= \frac{L-S}{L+S}$

$= \frac{47.8}{61.4+13.6} = \frac{47.8}{75.0}$

$= 0.64$

5. ஒரு தரவின் வீச்சு மற்றும் மிகச் சிறிய மதிப்பு ஆகியன முறையே 36.8 மற்றும் 13.4 எனில், மிகப்பெரிய மதிப்பைக் காண்க.

தீர்வு:

வீச்சு, $R = 36.8$

சிறிய மதிப்பு, $S = 13.4$

பெரிய மதிப்பு $L = R + S$

$= 36.8 + 13.4 = 50.2$

6. கொடுக்கப்பட்ட தரவின் வீச்சைக் காண்க.

வருமானம்	400-450	450-500	500-550
ஊழியர்களின் எண்ணிக்கை	8	12	30
வருமானம்	550-600	600-650	
ஊழியர்களின் எண்ணிக்கை	21	6	

தீர்வு:

கொடுக்கப்பட்டவை:

பெரிய மதிப்பு, $L = 650$

சிறிய மதிப்பு, $S = 400$

$\therefore$ வீச்சு $= L - S = 650 - 400 = 250$

7. முதல் 21 இயல் எண்களின் திட்ட விலக்கத்தைக் காண்க.

தீர்வு:

முதல் 21 இயல் எண்களின் திட்டவிலக்கம்

$\sigma = \sqrt{\frac{n^2-1}{12}}$

$= \sqrt{\frac{(21)^2-1}{12}} = \sqrt{\frac{441-1}{12}}$

$= \sqrt{\frac{440}{12}} = \sqrt{36.66} = 6.05$

8. ஒரு தரவின் திட்ட விலக்கம் 4.5 ஆகும். அதில் இருக்கும் தரவுப் புள்ளி ஒவ்வொன்றிலும் 5-ஐ கழிக்க கிடைக்கும் புதிய தரவின் திட்ட விலக்கம் காண்க.

தீர்வு:

ஒரு தரவின் திட்ட விலக்கம் $\sigma = 4.5$,

தரவுப்புள்ளி ஒவ்வொன்றிலும் 5ஐ கழிக்க,

கிடைக்கும் புதிய திட்ட விலக்கம் 4.5 ஆகும்.

9. ஒரு தரவின் திட்ட விலக்கம் 3.6 ஆகும். அதன் ஒவ்வொரு புள்ளியையும் 3 ஆல் வகுக்கும்போது கிடைக்கும் புதிய தரவின் திட்டவிலக்கம் மற்றும் விலக்க வர்க்கச் சராசரியைக் காண்க.

தீர்வு:

ஒரு தரவின் திட்டவிலக்கம் $\sigma = 3.6$

தரவுப்புள்ளி ஒவ்வொன்றிலும் 3 ஆல்

வகுக்கும்போது கிடைப்பது $= \frac{3.6}{3} = 1.2$

அதாவது புதிய திட்டவிலக்கம் $= 1.2$

புதிய விலக்க வர்க்க சராசரி $= (1.2)^2$

$\sigma^2 = 1.44$

10. தரவின் சராசரியானது 25.6 மற்றும் அதன் மாறுபாட்டுக் கெழுவானது 18.75 எனில், அதன் திட்ட விலக்கத்தைக் காண்க.

தீர்வு:

சராசரி $\bar{x} = 25.6$

மாறுபாட்டுக் கெழு $C.V. = 18.75$

$C.V = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$18.75 = \frac{\sigma}{25.6} \times 100$

$\sigma = \frac{18.75 \times 25.6}{100} = 4.8$

11. ஒரு தரவின் திட்ட விலக்கம் மற்றும் சராசரி ஆகியன முறையே 6.5 மற்றும் 12.5 எனில் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

தீர்வு:

மாறுபாட்டுக் கெழு $C.V. = \frac{\sigma}{\bar{x}} \times 100$

தரவின் திட்ட விலக்கம் $\sigma = 6.5$

சராசரி $\bar{x} = 12.5$

மாறுபாட்டுக் கெழு

$CV = \frac{\sigma}{\bar{x}} \times 100 = \frac{6.5}{12.5} \times 100$

$= \frac{6500}{125} = 52\ \%$

12. ஒரு தரவின் திட்ட விலக்கம் மற்றும் மாறுபாட்டுக் கெழு ஆகியன முறையே 1.2 மற்றும் 25.6 எனில் அதன் சராசரியைக் காண்க.

தீர்வு:

தரவின் திட்ட விலக்கம் $\sigma = 1.2$

மாறுபாட்டுக் கெழு $CV = 25.6$

$$CV = \frac{\sigma}{\bar{x}} \times 100$$

$$\bar{x} = \frac{\sigma}{C.V} \times 100 = \frac{1.2}{25.6} \times 100 = \frac{1200}{256}$$

$$\bar{x} = 4.7$$

13. ஒரு தரவின் சராசரி மற்றும் மாறுபாட்டுக் கெழு முறையே 15 மற்றும் 48 எனில் அதன் திட்ட விலக்கத்தைக் காண்க.

தீர்வு:

தரவின் சராசரி $\bar{x} = 15$

மாறுபாட்டுக் கெழு $C.V. = 48$

$$CV = \frac{\sigma}{\bar{x}} \times 100$$

திட்ட விலக்கம் $\sigma = \frac{C.V \times \bar{x}}{100} = \frac{48 \times 15}{100}$

$$= \frac{720}{100} = 7.2$$

14. $n = 5, \bar{x} = 6, \Sigma x^2 = 765$, எனில், மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

தீர்வு:

$n = 5, \bar{x} = 6, \Sigma x^2 = 765$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma x^2}{n} - \left(\frac{\Sigma x}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{765}{5} - (6)^2} = \sqrt{153 - 36} = \sqrt{117}$$

$$= 10.8$$

மாறுபாட்டுக்கெழு

$$CV = \frac{\sigma}{\bar{x}} \times 100\% = \frac{10.8}{6} \times 100$$

$$= \frac{1080}{6} = 180\%$$

15. ஒரு பையில் 5 நீல நிறப்பந்துகளும், 4 பச்சை நிறப்பந்துகளும் உள்ளன. பையிலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பந்து எடுக்கப்படுகிறது. எடுக்கப்படும் பந்தானது (i) நீலமாக (ii) நீலமாக இல்லாமல் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

தீர்வு:

மொத்த வாய்ப்புகளின் எண்ணிக்கை

$n(S) = 5 + 4 = 9$

i. A என்பது நீல நிறப்பந்தை பெறுவதற்கான நிகழ்ச்சி என்க.

A நிகழ்வதற்கான வாய்ப்புகளின் எண்ணிக்கை $n(A) = 5$

நீல நிறப் பந்து கிடைப்பதற்கான

நிகழ்தகவு, $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{5}{9}$

ii. $\bar{A}$ ஆனது நீல நிறப்பந்து கிடைக்காமல் இருக்கும் நிகழ்ச்சி, எனவே,

$$P(\bar{A}) = 1 - P(A) = 1 - \frac{5}{9} = \frac{4}{9}$$

16. இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப் படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

தீர்வு:

இரண்டு நாணயங்கள் சுண்டப்படும்பொழுது அதன் கூறுவெளியானது

$S = \{HH, HT, TH, TT\}$; $n(S) = 4$

A ஆனது நாணயங்களில் வெவ்வேறு முகங்கள் கொண்ட நிகழ்ச்சி என்க.

$A = \{HT, TH\}$; $n(A) = 2$

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{2}{4} = \frac{1}{2}$$

17. ஒரு நாணயம் மூன்று முறை சுண்டப்படுகிறது. இரண்டு அடுத்தடுத்த பூக்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

தீர்வு:

$S = \{HHH, HHT, HTH, THH, HTT, THT, TTH, TTT\}$

$n(S) = 8$

நிகழ்ச்சி A:

அடுத்தடுத்து பூ விழ நிகழ்ச்சி

$= \{HTT, TTH, TTT\}$

$n(A) = 3$

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{3}{8}$$

18. ஒரு நெட்டாண்டில் (leap year) 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

தீர்வு:

$S =$ {ஞாயிறு-திங்கள், திங்கள்-செவ்வாய், செவ்வாய்-புதன், புதன்-வியாழன், வியாழன்-வெள்ளி, வெள்ளி-சனி, சனி-ஞாயிறு}

$n(S) = 7$

A என்பது 53-வது சனிக்கிழமை கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

எனவே A = {வெள்ளி-சனி, சனி-ஞாயிறு}

$n(A) = 2$

53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான

நிகழ்தகவானது $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{2}{7}$

19. ஒரு பகடை உருட்டப்படும் அதே நேரத்தில் ஒரு நாணயமும் சுண்டப்படுகிறது. பகடையில் ஒற்றைப்படை எண் கிடைப்பதற்கும், நாணயத்தில் தலைக் கிடைப்பதற்குமான நிகழ்தகவைக் காண்க.

தீர்வு:



கூறுவெளி

$S = \{1H, 1T, 2H, 2T, 3H, 3T, 4H, 4T, 5H, 5T, 6H, 6T\}$

$n(S) = 12$

A ஆனது ஒற்றைப்படை எண் மற்றும் தலை கிடைப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$A = \{1H, 3H, 5H\}; n(A) = 3$

$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{3}{12} = \frac{1}{4}$

20. $P(A) = 0.37$, $P(B) = 0.42$, $P(A \cap B) = 0.09$ எனில், $P(A \cup B)$ ஐக் காண்க.

தீர்வு:

$P(A) = 0.37$, $P(B) = 0.42$, $P(A \cap B) = 0.09$

$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$

$P(A \cup B) = 0.37 + 0.42 - 0.09 = 0.7$

21. $P(A) = \frac{2}{3}, P(B) = \frac{2}{5}, P(A \cup B) = \frac{1}{3}$ எனில் $P(A \cap B)$ காண்க.

தீர்வு:

$P(A) = \frac{2}{3}, P(B) = \frac{2}{5}, P(A \cup B) = \frac{1}{3}$

$P(A \cap B) = P(A) + P(B) - P(A \cup B)$

$= \frac{2}{3} + \frac{2}{5} - \frac{1}{3} = \frac{10+6-5}{15}$

$P(A \cap B) = \frac{11}{15}$

5 மதிப்பெண்கள்

1. முதல் n இயல் எண்களின் சராசரி மற்றும் விலக்க வர்க்கச் சராசரிகளைக் காண்க.

தீர்வு:

சராசரி $\bar{x}$ = $\frac{\text{தரவுப் புள்ளிகளின் கூடுதல் மதிப்பு}}{\text{தரவுப் புள்ளிகளின் எண்ணிக்கை}}$

$= \frac{\Sigma x_i}{n} = \frac{1+2+3+\ldots+n}{n} = \frac{n(n+1)}{2 \times n}$

$\bar{x} = \frac{n+1}{2}$

விலக்க வர்க்கச் சராசரி σ^2

$= \frac{\Sigma x_i^2}{n} - \left(\frac{\Sigma x_i}{n}\right)^2 \left| \begin{array}{l} \Sigma x_i^2 = 1^2 + 2^2 + 3^2 + \ldots + n^2 \\ (\Sigma x_i)^2 = (1+2+3+\ldots+n)^2 \end{array} \right|$

$= \frac{n(n+1)(2n+1)}{6 \times n} - \left|\frac{n(n+1)}{2 \times n}\right|^2$

$= \frac{n+1}{2}\left[\frac{2n+1}{3} - \frac{n+1}{2}\right] = \frac{n+1}{2}\left[\frac{4n+2-3n-3}{6}\right]$

விலக்கவர்க்கச் சராசரி $\sigma^2 = \frac{n+1}{2}\left[\frac{n-1}{6}\right] = \frac{n^2-1}{12}$

2. இரண்டு பகடைகள் உருட்டப்படுகின்றன. கிடைக்கப்பெறும் முக மதிப்புகளின் கூடுதல் (i) 4 -க்குச் சமமாக (ii) 10-ஐ விடப் பெரிதாக (iii) 13-ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவு காண்க.

தீர்வு:

    2. புத்தகங்கள், செய்தித்தாள்கள் மூலம் தன் திட்டத்தை பரப்புதல்.

13. **பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?**
    1. உலகில் நிதிசார்ந்த ஒத்துழைப்பு.
    2. உலகில் வறுமை ஒழிப்பு.
    3. நிதிநிலை, பன்னாட்டு வணிகம்.
    4. வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி.

14. **ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்?**
    1. 1919 ஏப்ரல் 13ல் அமிர்தசரத்தில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் நடத்திய பொதுக்கூட்டத்தில் முன்னறிவிப்பின்றி ஜெனரல் டயர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு.
    2. துப்பாக்கி சொட்டையில் பலர் இறந்தனர். 1000க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

15. **திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் முக்கிய கூறுகளைத் தருக.**
    1. பிரிட்டிஷாருக்கு எதிரான முதல் அறை கூவல்.
    2. தமிழக பாளையக்காரர்கள் ஒன்று திரண்டனர்.

16. **ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்ப பெற்றார்?**
    1. 1922 சௌரி சௌரா சம்பவம் வன்முறையாக மாறி காவல்நிலையம் தீயிடப்பட்டது.
    2. இதனால் வேதனை அடைந்த காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்ப பெற்றார்.

17. **களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?**
    நவாப் மற்றும் கம்பெனியின் ஆதரவு மாபூஸ்கானுக்கு கிடைத்தாலும், திருவிதாங்கூர் படைகள் மற்றும் புலித்தேவர் படைகள் ஒன்று சேர்ந்து களக்காடு போரில் மாபூஸ்கான் படையினை தோற்கடித்தன.

18. **பெரியாரை ஒரு பெண்ணியக்க வாதியாக மதிப்பிடுக.**
    1. குழந்தை திருமணம், தேவதாசி முறை ஒழிப்பு.
    2. பெண்கள் விவாகரத்து பெறுதல், சொத்துரிமை பங்கு ஆதரவு.
    3. தாய்மை பெருஞ்சுமை என கூறினார்.

19. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக?

கிழக்கு – சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி.

மேற்கு – சேத்தூர், ஊத்துமலை, சிங்கம்பட்டி, நடுவக்குறிச்சி.

20. தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்?

1. அரசியலமைப்பு மூலம் பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சி (டொமினியன் தகுதி) அடைவது.
2. தங்கள் இலக்குகளை வன்முறையற்ற அரசியல் சாசனம் மூலம் அடைவது.

21. முதல் உலகப்போருக்கு பிந்தைய உலகத்தில் மூன்று சர்வாதிகாரிகள் யாவர்?

1. ஹிட்லர், 2. முசோலினி, 3. பிராங்கோ

22. பன்னாட்டு சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களை பட்டியலிடுக?

1. சங்கத்திற்கென ராணுவம் இல்லை.
2. கூட்டு பாதுகாப்பு கோட்பாடு இல்லை.

23. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக?

1. இரண்டு வல்லரசுகளிலும் (ரஷ்யா,அமெரிக்கா) சேராத நாடுகள்
2. ரஷ்யா வீழ்ச்சிக்குப்பின் இதன் முக்கியத்துவம் குறைந்தது.

24. மாவோவின் நீண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக?

1. 1934ல் 1 லட்சம் பொதுவுடைமை இராணுவ வீரர்களுடன் மாவோ தொடங்கிய பயணம்.
2. 20,000பேர் மட்டும் 6000 மைல்கள் கடந்து ஷேனிப் பகுதியை அடைந்தனர்.

25. சீனஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக?

1. சீனாவை ஜப்பான் தோற்கடித்தது, ஐரோப்பிய சக்திகள் விரும்பவில்லை.
2. ஜப்பான் கிழக்கு ஆசியாவில் வலிமை பெற்றது.

26. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

1. இங்கிலாந்து – ஆரவாரமான நாட்டுப்பற்று.
2. பிரான்ஸ் – அதிதீவிர நாட்டுப்பற்று.
3. ஜெர்மனி – வெறிகொண்ட நாட்டுப்பற்று.

27. தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக?

1. ஆங்கிலேய பண்பாடு திணிப்பு தமிழ்மொழி மற்றும் கலாச்சாரத்தை பாதித்தது.
2. இதன் விளைவாக சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றி தமிழ் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

28. பகத்சிங் பற்றி குறிப்பு வரைக?

1. ஆங்கிலேயரை எதிர்க்க ஹிந்துஸ்தான் குடியரசு! ராணுவத்தை மீண்டும் அமைத்தார் பகத்சிங்.
2. 1929 ல் மத்திய சட்டப்பேரவையில் புகைகுண்டு ஒன்றை பகத்சிங்கும், K.K தத்தும் வீசினர்.
3. பகத்சிங் கைது செய்யப்பட்டு மரண தண்டனை பெற்றார்.

29. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறு குறிப்பு வரைக?

1. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு இரக்கம்.
2. அனைத்து மக்களுக்கும் இலவச உணவு.
3. ஜீவகாருண்யம்.
4. திருவருட்பா. (நூல்களின் தொகுப்பு).

30. பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?

1. தனி தொகுதிகள் கொள்கை கைவிடல்.
2. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு.

31. கிலாபத் இயக்கம் சிறு குறிப்பு வரைக?

1. அலி சகோதரர்கள் தொடங்கிய இயக்கம்.
2. இந்து முஸ்லீம் இணைய வாய்ப்பு ஏற்படும் என காந்தியடிகள் ஆதரித்தார்.

32. சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?

1. இந்தியர்கள் எவரும் இல்லை.
2. அரசியல் சாசனத்தை நிர்ணயிக்கும் உரிமை தங்களுக்குஇல்லை என காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் சைமன் குழுவை புறக்கணித்தன.

33. கம்பெனியாருக்கும், கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏற்படக் காரணமாக விளங்கியது எது?

1. பாளையங்களிடம் வரிவசூல் செய்யும் உரிமையை பெற்ற கம்பெனி ஆட்சியாளர்கள்பாளையக்காரர்களை அவமானபடுத்தியும், படைகளை வைத்தும் வரிவசூல் செய்தனர்.
2. இதுவே பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரரான கட்டபொம்மனுக்கும். கம்பெனிக்கும் இடையே சர்ச்சை ஏற்பட காரணமானது.

34. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

தமிழ் – திராவிடன்

ஆங்கிலம் – ஜஸ்டிஸ்

தெலுங்கு – ஆந்திர பிரகாசிகா.

35. முத்து துறைமுக நிகழ்வை விவரி?

1. 1941ல் அமெரிக்க கடற்படை தளமான முத்து துறைமுகத்தை ஜப்பான் தாக்கிய நிகழ்வு.
2. கோபமுற்ற அமெரிக்கா, ஜப்பான் மீது போர் தொடுத்தது.

36. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் கட்டுப்பாட்டில் வைக்க அமெரிக்கா பண உதவி அளித்தல்.

37. டாலர் ஏகாதிபத்தியம் தெளிவுபட விளக்குக?

1. அமெரிக்கா தொலைதூர நாடுகளுக்கு பொருளாதார உதவிசெய்தல்.
2. பின்னர் ஆதிக்கம் செலுத்தி தக்கவைத்தல்.

38. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.

1. வேலை நிறுத்தம், விடுதலை பொதுக்கூட்டத்தினை வ.உ.சியும், சிவாவும் திருநெல்வேலியில் நடத்தினர்.
2. எனவே ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டதே திருநெல்வேலி எழுச்சியாகும்.

39. வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?

1. ஆதாயம் இன்றி வளங்கள் தொடர்ந்து பரிமாற்றம் செய்வது.
2. இங்கிலாந்துக்கு இந்தியா மூலப்பொருள் பரிமாற்றம் செய்தது.

40. மகரிஷி தேவேந்திரநாத்தாகூர் முன்வைத்த நான்கு கூறுகளைக் குறிப்பிடுக?
1. கடவுள் ஒருவரே,
2. அவரே ஞானம், சக்தி, நிலையானவர்,
3. வீடுபேறு கடவுளை சார்ந்தது.
4. கடவுளை நம்புதல்.

41. தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடுக?
1. உ.வே.சா 2. திரு.வி.க. 3. மறைமலையடிகள்
4. பாரதியார் 5. தாமோதரனார் 6. பரிதிமாற்கலைஞர்

42. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூக தீமைகள் யாவை?
1. சதி, பலதார திருமண ஒழிப்பு.
2. குழந்தை திருமணம் எதிர்ப்பு
3. விதவை மறுமணம் ஊக்குவிப்பு.

43. நீதிக்கட்சியால் நிறைவேற்றப்பட்ட இந்து சமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்?
1. 1926ல் நிறைவேறிய இச்சட்டம் எந்த ஒரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோயில் நிர்வாக குழுவில் உறுப்பினராகவும், கோயில் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்தது.
2. இதனால் உயர்சாதியினரால் சுரண்டப்பட்ட கோயில் சொத்துக்கள், பொது சொத்துக்கள்.

புவியியல் - இரண்டு மதிப்பெண்

1. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக?

வடக்கு	-	ஆந்திரா,
மேற்கு	-	கேரளா
வடமேற்கு	-	கர்நாடகா,
கிழக்கு	-	வங்காள விரிகுடா,
தெற்கு	-	இந்தியப் பெருங்கடல்.

2. வேளாண்மை வரையறுக்கவும்?
1. குறிப்பிட்ட பயிரை உற்பத்தி செய்தல்.
2. மக்கள் மற்றும் கால்நடைகளுக்கு உணவு வழங்குதல்.
3. நாட்டிற்கு 25% வருமானம், 50% வேலைவாய்ப்புதருவது.

3. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக?
1. மேட்டூர் அணை 2. பவானிசாகர் அணை
3. அமராவதி அணை 4. சாத்தனூர் அணை
5. பாபநாசம் அணை

4. இந்தியாவில் அதிக மழைபெறும் பகுதிகள் யாவை?
1. அசாம், 2. திரிபுரா, 3. நாகலாந்து.
4. தெற்கு மேகாலயா, 5. மேற்கு கடற்கரை.

5. பேரிடர் அபாய நேர்வுவரையறு?
ஐ.நாவின் UNDRR கூற்றின் படி, பேரிடருக்கான காரணங்களை முறையாகக் கண்டறிந்து பேரிடரின் போது அதன் தாக்கங்களைக் குறைப்பதாகும்.

6. பன்னாட்டு வணிகம் வரையறு?
1. இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளிடையே நடைபெறும் வணிகம்.
2. இரு கூறுகள் ஏற்றுமதி, இறக்குமதி.
3. நீர்வழி, வான்வழி. 4. அயல்நாட்டு பணம் பயன்பாடு.

7. கோயம்புத்தூர் ஏன் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?
கோயம்புத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான பருத்தி நெசவாலைகள் அமைந்துள்ளதால் கோயம்புத்தூர் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது.

8. இயற்கை எரிவாயு என்றால் என்ன?
1. பூமிக்கடியில் கிடைக்கும் ஒரு வாயு.
2. நீர்ம கரிம வாயு.
3. பெட்ரோலியத்துடன் இருக்கும்,
4. பெரும்பகுதி மீத்தேன்.

9. வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன?
1. புவிப்பரப்பில் இருந்து உயரே செல்ல செல்ல வெப்ப நிலை குறைவது.
2. 1000 மீட்டருக்கு 6.5°C வெப்பநிலை குறையும்.
3. எனவே சமவெளியினை விட மலைப்பகுதி குளிராக உள்ளது.

10. இந்திய வேளாண் பருவங்களை குறிப்பிடுக?
1. காரிஃப் (ஜீன் – செப்டம்பர்)
2. ராபி (அக்டோபர் – மார்ச்)
3. சையது (ஏப்ரல் – ஜீன்)

11. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி கூறுக?
1. இந்தியாவின் மேற்கில் உள்ளது.
2. முருகைப் பாறைகள் 3. தலைநகரம் – காவராத்தி
4. பரப்பளவு 32 ச.கி.மீ.

12. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக?
1. 82°30' கிழக்கு தீர்க்க ரேகையின் தலநேரம்.
2. மிர்சாபூர் வழியாக செல்கிறது.
3. கிரின் வீச்சை விட 5.30 மணி நேரம் முன்னர்.

13. தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகள் யாவை?
1. காரையாறு. 2. சேர்வலாறு.
3. மணிமுத்தாறு. 4. பச்சை ஆறு.

14. புயலின் போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?
1. கைபேசி, வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மூலம் மீனவர்களை எச்சரிக்கிறது.
2. மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்த்தும், படகுகளை பாதுகாக்கவும் கூறுகிறது.

15. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
1. தகவல், எண்ணம், கருத்து பரிமாற்றம்.
2. இருவகை : 1. தனிமனித, 2. பொது.

16. இந்தியாவில் மேற்குநோக்கி பாயும் ஆறுகளைப் பற்றிக் கூறுக?
1. நர்மதை, 2. தபதி, 3. மாஹி, 4. சபர்மதி.

17. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக?

1. குளிர்காலம்	– ஜனவரி – பிப்ரவரி.
2. கோடைகாலம்	– மார்ச் – மே.
3. தென்மேற்கு பருவக்காற்று காலம்	– ஜீன் – செப்டம்பர்.
4. வடகிழக்கு பருவக்காற்று காலம்	– அக்டோபர் – டிசம்பர்.

18. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக?

1. ஆந்திரசைட்	-	80 - 90%
2. பிட்மினஸ்	-	60 - 80%
3. பழுப்பு நிலக்கரி	-	40 - 60%
4. மரக்கரி	-	40%க்கு குறைவு.

19. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்திப் பகுதிகளைக் குறிப்பிடுக?

1. மேற்கு கடற்கரைக்கு அருகில்;
   1. மும்பை ஹை 2. குஜராத் கடற்கரை 3. காம்பே.
2. கிழக்கு கடற்கரைக்கு அருகில்;
   1. பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு 2. திக்பாய்
   3. அந்தமான்நிக்கோபார்.

20. தமிழ்நாட்டின் முக்கியத் தீவுகளை குறிப்பிடுக?

1. பாம்பன், 2. முயல்தீவு, 3. தீவுத்திடல், 4. ஸ்ரீரங்கம்,
5. நல்லதண்ணி தீவு, 6. உப்புதண்ணித் தீவு,
7. புள்ளிவாசல்.

21. ஜெட் காற்றோட்டங்கள் என்றால் என்ன?

1. வளிமண்டல உயர் அடுக்கில் குறுகிய பகுதியில் வேகமாக நகரும் காற்றுகள்.
2. இவை தென்மேற்கு பருவக்காற்று, வெப்பமண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

22. இந்தியாவில் உள்ள உயிர்கோள பெட்டகங்களில் ஏதேனும் ஐந்தினை எழுதுக?

1. நீலகிரி 2. கட்ச் 3. பன்னா 4. சுந்தரவனம்
5. அகஸ்தியர் மலை 6. மன்னார் வளைகுடா

23. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக?

1. தீவிர வேளாண்மை, 2. படிக்கட்டு வேளாண்மை
3. இடப்பெயர்வு வேளாண்மை,
4. தன்னிறைவு வேளாண்மை, 5. கலப்பு வேளாண்மை,
6. வறண்ட வேளாண்மை.

24. நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு வரைக.

1. எண்ணெய், இயற்கை எரிவாயு வயல்களையும் சந்தை பகுதிகளோடு இணைக்கும் எளிதான மற்றும் சிறந்த போக்குவரத்தாகும்.
2. குழாய் அமைக்க ஆரம்பகால செலவு அதிகம், பராமரிப்பு செலவு குறைவு.

25. மண் வரையறு?

1. கனிமங்களின் கூட்டு, மக்கிய தாவர, விலங்கினப் பொருட்கள் மற்றும் காற்று, நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது.
2. புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.

26. சாலை போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக?

1. குறுகிய பயணத்திற்கு ஏற்றது.
2. எல்லா மக்களும் பயன்படுத்தலாம்
3. பராமரிப்பு செலவு எளிது.

27. இந்தியாவின் தோட்டப்பயிர்களைக் குறிப்பிடுக?

1. உயரமான மலை சரிவுகளில் பயிரிடப்படுவது.
2. (எ.கா) தேயிலை, காபி, இரப்பர், வாசனைப்பொருள்.

28. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக?

1. மேற்கு வங்கம் ஹூக்ளி ஆற்றங்கரை.
2. டிட்டகார், பட்ஜ்பட்ஜ், ஹவுரா.
3. ஆந்திரா, சத்தீஸ்கர், பீகார், அசாம், ஒடிசா.

29. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?

1. இத்திட்டம் சென்னையிலும், புறநகரிலும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.
2. மே 2017 முதல் மெட்ரோ இரயில் அமைப்பும், பாதாள இரயில் போக்குவரத்துடன் விரிவு செய்துள்ளது.

30. தக்காண பீடபூமி குறிப்பு வரைக?

1. தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ளது.
2. முக்கோண வடிவம் கொண்டது.
3. இதன் பரப்பளவு சுமார் 7 லட்சம் சதுர கி.மீ.
4. இதன் உயரம் சுமார் 500 மீ முதல் 1000 மீ வரை.

31. வளத்தை வரையறுத்து அதன் வகைகளைக் குறிப்பிடுக?

1. இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்தும். (எ.கா) நீர், மண், காற்று
2. வகைகள் : 1. புதுப்பிக்க இயலும் வளங்கள்
   2. புதுப்பிக்க இயலா வளங்கள்

32. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?

1. ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்டவை.
2. உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள்
3. வகைகள்: 1. உலோகம் 2. அலோகம்

33. தேரி என்றால் என்ன?

இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரை ஓரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள்.

34. இடம் பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

1. ஒரு பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்வது.
2. வகைகள்: 1. உள்நாட்டு, 2. சர்வதேச.

35. தமிழ்நாட்டின் வேளாண் பருவகாலங்களை எழுதுக.

1. சொர்ணவாரி (சித்திரை பட்டம்) (ஆடிபட்டம்)
2. சம்பா 3. நவரை

36. பருவ மழை வெடிப்பு என்றால் என்ன?

1. தென்மேற்கு பருவக்காற்று இடிமின்னலுடன் தொடங்குவது.
2. இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.

37. மெக்னீசியத்தின் (மாங்கனீசு) பயன்களைக் குறிப்பிடுக?

1. வெளுக்கும் தூள், 2. பூச்சிக்கொல்லி,
3. வண்ணப்பூச்சு
4. மின்கலன்கள் தயாரிக்க பயன்படுகிறது.

38. கடற்கரை சமவெளி எவ்வாறு உருவாகிறது?

1. இச்சமவெளி கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாகிறது.
2. சில இடங்களில் 80 கி.மீ அதிகமான அகலத்துடன் காணப்படுகிறது.

39. கலப்பு வேளாண்மை என்றால் என்ன?

1. வேளாண்மையுடன் கால்நடை, கோழி, தேனீ வளர்ப்பு, மீன் பிடித்தல்.
2. விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்கிறது.

40. படிக்கட்டு முறை வேளாண்மை பற்றி சிறுகுறிப்பு வரைக?

1. மலைப்பிரதேசங்களில் பின்பற்றப்படுவது.
2. மண்ணரிப்பை தடுக்கிறது.

41. வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

1. இயற்கை 2. அமைப்புசார்
3. உட்கட்டமைப்பு 4. தொழில்நுட்ப

42. இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகள் யாவை?

1. அட்சங்கள் 2. கடலில் இருந்து தொலைவு
3. நிலத்தோற்றம் 4. பருவக்காற்று 5.ஜெட் காற்று.

43. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக?

1. ஈரத்தில் சேறாக இருக்கும்.
2. ஈரத்தை நீண்ட நேரம் தக்க வைக்கும்.
3. பசால்ட் பாறைகளால் உருவானது.

குடிமையியல் - இரண்டு மதிப்பெண்கள்

1. செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள் எவை?

1. தமிழ், (2004) 3. கன்னடம், (2008)
2. சமஸ்கிருதம், (2005) 4. தெலுங்கு, (2008)
5. மலையாளம், (2013) 6. ஒடியா. (2014)

2. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயரைக் குறிப்பிடுக?

1. B – பிரேசில், 2. R – ரஷ்யா, 3. I – இந்தியா,
4. C – சீனா, 5. S – சவுத் ஆப்பிரிக்கா.

3. உச்சநீதிமன்ற நீதிபதியாவதற்கு தகுதிகள் யாவை?

1. இந்திய குடிமகன்.
2. 5 ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதி.
3. 10 ஆண்டுகள் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்.
4. சிறந்த சட்டவல்லுநர்.

4. சார்க் உறுப்பு நாடுகளில் பட்டியலிடுக? (PAIN MBBS)

P – பாகிஸ்தான், A – ஆப்கானிஸ்தான், I – இந்தியா,
N – நேபாளம், M – மாலத்தீவுகள், B - பூட்டான்,
B – பங்களாதேஷ், S - ஸ்ரீலங்கா.

5. பஞ்சசீலக் கொள்கைகளைப் பட்டியலிடுக?

1. நாட்டின் இறையாண்மை, எல்லைமீது பரஸ்பர மதிப்பு.
2. பரஸ்பர ஆக்கிரமின்மை.
3. பரஸ்பர உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமை.
4. பரஸ்பர நலனுக்கு சமத்துவம் மற்றும் ஒத்துழைப்பு.
5. பரஸ்பர அமைதி.

6. உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?

1. மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்தல்.
2. முக்கிய வழக்குகளை நேரடியாக விசாரித்தல். (உயில், திருமணம், நீதிமன்ற அவமதிப்பு).

7. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக?

1. சமத்துவ உரிமை. 2. சுதந்திர உரிமை.
3. சுரண்டலுக்கெதிரான உரிமை.
4. சமயசார்பு உரிமை.
5. கல்வி மற்றும் கலாச்சார உரிமை.
6. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு உரிமை.

8. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு தகுதிகள் யாவை?

1. 35 வயது நிரம்பிய, இந்தியக்குடிமகன்.
2. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது.

9. வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக?

1. உடன்படிக்கை 2. ஒப்பந்தங்கள்
3. தூதுவர் நியமனம் 5. சர்வதேச வணிகம்
4. வெளிநாட்டு உதவி, 6. ஆயுத படை.

10. நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின் படி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?

1. கேபினெட் அமைச்சர்கள். 2. இராஜாங்க அமைச்சர்கள்.
3. துணை அமைச்சர்கள்.

11. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் என்ன?

1. மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர்
2. மாநில நிர்வாகத்தின் எல்லா அதிகாரங்களும் பெற்றவர்.

12. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?

1. சிட்டிசன் எனும் ஆங்கில சொல் சிவிஸ் எனும் இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டது.
2. இதன் பொருள் நகர அரசில் வசிப்பவர் என்பதாகும்

13. தேசிய அவசர நிலை என்றால் என்ன?

உள்நாட்டு அவசர நிலை காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டம் 352ன் கீழ் அசவர நிலையை பிறப்பிப்பது தேசிய அவசர நிலை ஆகும்.

14. நிதி மசோதா என்றால் என்ன?

1. வருமானம் மற்றும் செலவு சார்ந்த மசோதா.
2. புதிய வரிவிதிப்பு, வரி குறைப்பு, வரிநீக்கம் இதில் அடங்கும்.

15. நீதிப்பேராணை என்றால் என்ன?

1. நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை (அ) ஆணை.
2. சில சட்டங்களை நிறைவேறாமல் தடுக்க நீதிமன்றத்தினால் வெளியிடப்படும் ஆணை.

16. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி?

1. படைவலிமை குறைப்பை வலியுறுத்தி வருகிறது.
2. முதலில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை.
3. ஐ.நாவின் திட்டத்திற்கு இந்தியா ஆதரவு.
4. அணு ஆயுதத்தை தாக்குதலுக்கு பயன்படுவதில்லை.

17. சபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக?

1. இந்தியா ஆப்கானிஸ்தான்ஈரான் முக்கூட்டு ஒப்பந்தம்.
2. சாபஹார் துறைமுகத்தில் மூன்று நாடுகளும் போக்குவரத்து வழிகள் ஏற்படுத்துதல்.

18. இந்தியக்குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறார்?

1. ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால்.
2. இவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை கூறுக?

1. சீனா 2. இலங்கை 3. பாகிஸ்தான்
4. ஆப்கானிஸ்தான் 5. நேபாளம், 6. பூட்டான்
7. வங்காளதேசம் 8. மியான்மர்.

20. 'கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம்' பற்றி நீவிர் அறிவது என்ன?

1. இந்தியா உருவாக்கிய போக்குவரத்துத் திட்டம்.
2. கொல்கத்தா சிட்வே இணைப்பு சரக்கு போக்குவரத்து திட்டம்.

21. அணிசேரா இயக்கத்தின் நிறுவன தலைவர்கள் யாவர்?

1. நேரு 2. நாசர் 3. டிட்டோ 4. சுகர்னோ 5. நுக்ருமா.

22. அரசியலமைப்பு என்றால் என்ன?

1. நாட்டு முன்னேற்றத்தின் அச்சாணி.
2. மத்திய, மாநில அரசுகளின் அதிகாரத்தை கூறுவது.
3. நாட்டின் நிர்வாகக் கொள்கைகளை பிரதிபலிக்கும் சட்டம்.

23. இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகலாவிய குழுக்களை பட்டியடுக.

1. பிரிக்ஸ் 2. ஐ.நா.சபை 3. சார்க் 4. G-20
5. அணிசேரா இயக்கம் 6. IBSA.

24. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை சிறுகுறிப்பு வரைக?

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது பணியை சம்மந்தப்பட்ட துறையில் நிறைவேற்றுதல்.

பொருளியல் - இரண்டு மதிப்பெண்கள்

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) பொருள் என்ன?

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் (ம) பணிகளின் மொத்த மதிப்பு.

2. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக?

1. மதிய உணவுத்திட்டம் மற்றும் ICDS.
2. Dr. MGR ஊட்டச்சத்து திட்டம்.
3. பிரதமரின் கிராமோதயா திட்டம்.
4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.

3. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) சிறுகுறிப்பு வரைக.

1. இது மறைமுக வரிகளில் ஒன்று.
2. குறிக்கோள்: ஒரு நாடுஒரு அங்காடிஒரு வரி ஆகும்.
3. ஜீலை 12017 முதல் நம் நாட்டில் நடைமுறையில் உள்ளது.

4. GDP இன் முக்கியத்துவத்தை எழுதுக?

1. பொருளாதார வளர்ச்சி பற்றிய.
2. பொருளாதார திட்டமிட. 3. வாங்கும் திறன் மதிப்பிட.
4. பணவீக்க, பணவாட்ட சிக்கல் தீர்க்க.

5. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள் யாவை?

1. உணவு கிடைத்தல். 2. உணவுக்காக அணுகல்.
3. உணவினை உறிஞ்சுதல்.

6. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?

1. நோக்கம் : நிறுவனங்களிடையே பரஸ்பர தொடர்பு ஏற்படுத்துவது.
2. வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்கள் தங்களின் தேவைகளான சந்தைகள். தொழில் நுட்பங்கள், திறன்களை பகிர்வதே தொழில்முறை தொகுப்பாகும்.

7. தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் சிக்கல்கள் யாவை?

1. திரவக்கழிவுகளால் சுகாதாரம், நீர்நிலைகள், விவசாயம் பாதிப்பு,
2. முதன்மை தொழில் நுட்பத்தால் வேலைவாய்ப்பு குறைவு.

8. GDP ல் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

1. முதன்மை துறை – விவசாயம்
2. இரண்டாம் துறை – தொழில்
3. மூன்றாம்துறை – பணிகள்

9. வளர் வீத வரி என்றால் என்ன?

1. வருமானம் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிப்பது வளர் வீத வரி ஆகும்.
2. இம்முறையில் வரியின் அடிப்படைத் தளம் இம்முறையில் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிக்கும்.

10. அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?

வரி செலுத்துவதன் மூலம் அரசு அந்த நிதியிலிருந்து பல செயல்களை நிறைவேற்றுகிறது.

(எ.கா) 1.பொருளாதார உள்கட்டமைப்பு செலவுகள்
2. இராணுவம் 3. அறிவியல் ஆராய்ச்சி
4. கலாச்சாரம் – கலைகள்
5. பொதுப்பணிகள் – பொதுக்காப்பீடுகள்.

11. நாட்டு வருமானம் வரையறுக்க?

ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

12. தனிநபர் வருமானம் (அ) தலா வருமானம் என்றால் என்ன?

நாட்டு வருமானத்தை மக்கள்தொகையால் வகுப்பதால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

தனிநபர் வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

13. பசுமை புரட்சியின் விளைவுகள் யாவை?

1. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு (அரிசி, கோதுமை)
2. முக்கிய தானிய பயிர்களின் விளைச்சல் அதிகரிப்பு.
3. தானிய உற்பத்தியால் நிலப்பரப்பு அதிகரிப்பு.

14. FAOவின் படி உணவு பாதுகாப்பை வரையறு?

எல்லா மக்களுக்கும் எல்லா நேரத்திலும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணவு தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வது.

15. உலகமயமாக்கல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

1. உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பது.
2. வகைகள்: 1.தொன்மையான 2. இடைப்பட்ட 3. நவீன.

19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை கூறுக?
1. சீனா 2. இலங்கை 3. பாகிஸ்தான்
4. ஆப்கானிஸ்தான் 5. நேபாளம், 6. பூட்டான்
7. வங்காளதேசம் 8. மியான்மர்.

20. 'கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம்' பற்றி நீவிர் அறிவது என்ன?
1. இந்தியா உருவாக்கிய போக்குவரத்துத் திட்டம்.
2. கொல்கத்தா சிட்வே இணைப்பு சரக்கு போக்குவரத்து திட்டம்.

21. அணிசேரா இயக்கத்தின் நிறுவன தலைவர்கள் யாவர்?
1. நேரு 2. நாசர் 3. டிட்டோ 4. சுகர்னோ 5. நுக்ருமா.

22. அரசியலமைப்பு என்றால் என்ன?
1. நாட்டு முன்னேற்றத்தின் அச்சாணி.
2. மத்திய, மாநில அரசுகளின் அதிகாரத்தை கூறுவது.
3. நாட்டின் நிர்வாகக் கொள்கைகளை பிரதிபலிக்கும் சட்டம்.

23. இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகலாவிய குழுக்களை பட்டியடுக.
1. பிரிக்ஸ் 2. ஐ.நா.சபை 3. சார்க் 4. G-20
5. அணிசேரா இயக்கம் 6. IBSA.

24. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை சிறுகுறிப்பு வரைக?
மனுதாரர் சட்ட உதவியுடன் தனது பணியை சம்மந்தப்பட்ட துறையில் நிறைவேற்றுதல்.

பொருளியல் - இரண்டு மதிப்பெண்கள்

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) பொருள் என்ன?
ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் (ம) பணிகளின் மொத்த மதிப்பு.

2. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக?
1. மதிய உணவுத்திட்டம் மற்றும் ICDS.
2. Dr. MGR ஊட்டச்சத்து திட்டம்.
3. பிரதமரின் கிராமோதயா திட்டம்.
4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.

3. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) சிறுகுறிப்பு வரைக.
1. இது மறைமுக வரிகளில் ஒன்று.
2. குறிக்கோள்: ஒரு நாடுஒரு அங்காடிஒரு வரி ஆகும்.
3. ஜீலை 12017 முதல் நம் நாட்டில் நடைமுறையில் உள்ளது.

4. GDP இன் முக்கியத்துவத்தை எழுதுக?
1. பொருளாதார வளர்ச்சி பற்றிய.
2. பொருளாதார திட்டமிட. 3. வாங்கும் திறன் மதிப்பிட.
4. பணவீக்க, பணவாட்ட சிக்கல் தீர்க்க.

5. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள் யாவை?
1. உணவு கிடைத்தல். 2. உணவுக்காக அணுகல்.
3. உணவினை உறிஞ்சுதல்.

6. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?
1. நோக்கம் : நிறுவனங்களிடையே பரஸ்பர தொடர்பு ஏற்படுத்துவது.
2. வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்கள் தங்களின் தேவைகளான சந்தைகள். தொழில் நுட்பங்கள், திறன்களை பகிர்வதே தொழில்முறை தொகுப்பாகும்.

7. தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் சிக்கல்கள் யாவை?
1. திரவக்கழிவுகளால் சுகாதாரம், நீர்நிலைகள், விவசாயம் பாதிப்பு,
2. முதன்மை தொழில் நுட்பத்தால் வேலைவாய்ப்பு குறைவு.

8. GDP ல் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
1. முதன்மை துறை – விவசாயம்
2. இரண்டாம் துறை – தொழில்
3. மூன்றாம்துறை – பணிகள்

9. வளர் வீத வரி என்றால் என்ன?
1. வருமானம் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிப்பது வளர் வீத வரி ஆகும்.
2. இம்முறையில் வரியின் அடிப்படைத் தளம் இம்முறையில் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிக்கும்.

10. அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?
வரி செலுத்துவதன் மூலம் அரசு அந்த நிதியிலிருந்து பல செயல்களை நிறைவேற்றுகிறது.
(எ.கா) 1.பொருளாதார உள்கட்டமைப்பு செலவுகள்
2. இராணுவம் 3. அறிவியல் ஆராய்ச்சி
4. கலாச்சாரம் – கலைகள்
5. பொதுப்பணிகள் – பொதுக்காப்பீடுகள்.

11. நாட்டு வருமானம் வரையறுக்க?
ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

12. தனிநபர் வருமானம் (அ) தலா வருமானம் என்றால் என்ன?
நாட்டு வருமானத்தை மக்கள்தொகையால் வகுப்பதால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.
தனிநபர் வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

13. பசுமை புரட்சியின் விளைவுகள் யாவை?
1. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு (அரிசி, கோதுமை)
2. முக்கிய தானிய பயிர்களின் விளைச்சல் அதிகரிப்பு.
3. தானிய உற்பத்தியால் நிலப்பரப்பு அதிகரிப்பு.

14. FAOவின் படி உணவு பாதுகாப்பை வரையறு?
எல்லா மக்களுக்கும் எல்லா நேரத்திலும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணவு தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வது.

15. உலகமயமாக்கல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
1. உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பது.
2. வகைகள்: 1.தொன்மையான 2. இடைப்பட்ட 3. நவீன.

16. வரி வரையறுத்து, அதன் வகைகளை கூறுக?
1. எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி அரசுக்கு செலுத்தும் கட்டாய கட்டணம்.
2. வகைகள் : 1. நேர்முக வரி, 2. மறைமுக வரி.

17. கருப்பு பணம் என்றால் என்ன?
1. கருப்பு சந்தையில் ஈடுபட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரி பணமே கருப்பு பணமாகும்.
2. வரி நிர்வாகத்திடம் மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் கருப்புப் பணம் ஆகும்.

18. தொழில் முனைவோர் என்றால் என்ன?
1. புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் தொழில் முனைவோர் ஆவார்.
2. சிறந்த நிர்வாகத்திறன், வலிமையான குழுவை அமைக்கும் திறமை, தேவையான தலைமை பண்புகளை கொண்டவர்.

19. உலகமயமாக்கலின் நேர்மையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக
1. வாழ்க்கை தரம் அதிகரிப்பு
2. வேலைவாய்ப்பு அதிகரிப்பு
3. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு
4. வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரிப்பு.

20. தொழில் முனைவு என்றால் என்ன?
1. தொழில் முனைவோர் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகள்.
2. ஒன்றை உருவாக்கி வெளிப்படுத்தும் திறன்.

21. வரி ஏய்ப்பு என்றால் என்ன?
தனிநபர்கள் நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு.
(எ.கா) 1. வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்,
2. மறைக்கப்பட்ட பணம் ஆகும்.

22. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?
பல நாடுகளில் நிறுவனங்களை தொடங்கி நடத்துவது.
(எ.கா) பெப்சி, TVS, SBI

23. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?
1. வர்த்தகத்தில் நியாயமான விதிமுறைகளை அளிப்பதாகும்
2. எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்தல்.

24. மதிப்பு கூட்டு முறையை எடுத்துக்காட்டுடன் வரையறுக்கவும்?
பால் + சர்க்கரை + டீத்தூள் = தேனீர்
இடைநிலை பண்டங்கள் = இறுதி பண்டங்கள்.

25. இந்தியாவில் பொருளாதார கொள்கைகளின் பெயர்களை எழுதுக?
1. வேளாண்மை 2. தொழில்துறை,
3. புதிய பொருளாதார கொள்கை 4. வர்த்தகம்,
5. வேலை வாய்ப்பு. 6. கூலிக் கொள்கை.

26. நிறுவன வரி என்றால் என்ன?
1. தங்கள் பங்குதாரர்களிடம் இருந்து தனி நிறுவனங்களுக்கு விதிக்கப்படுவது.
2. வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது.

காரணம் கூறு.

1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.
நாட்டின் 50% வேலைவாய்ப்பும், 25% வருமானமும் வேளாண்மை தருவதால் இது இந்தியாவின் முதுகெலும்பாகும்.

2. மழை நீர் சேமிப்பு அவசியம்
நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், விவசாயம், குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும் மழைநீர் சேமிப்பு அவசியம்.

3. இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன
புவிமேலோட்டு பேரியக்க விசையின் காரணமாக புவிமேலோடு மடிக்கப்பட்டு மடிப்பு மலைகள் உருவாகின.

4. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகம் ஏன்?
வேலை வாய்ப்பு, சுகாதாரம், சிறந்த கல்வி, போக்குவரத்து, பொழுதுபோக்கு போன்ற வசதிகள் பெருநகரங்களில் கிடைப்பதால் மக்கள் தொகை அதிகம்.

5. மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.
உயரே செல்ல செல்ல வளிமண்டல வெப்பம் குறைவதால் மலைப்பகுதிகள் சமவெளிகளைவிட குளிரானது.

6. தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிக குறைந்த மழையைப் பெறுகிறது.
தென்மேற்கு பருவக்காற்றின் மழை மறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால், தமிழ்நாடு மிக குறைந்த மழையைப் பெறுகிறது.

7. தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப்பாயும் நதிகள்.
தென்னிந்திய நதிகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கிழக்கு நோக்கி பாய்கின்றன.
தென்னிந்தியாவின் நில அமைப்பு மேற்கில் உயரமாகவும், தெற்கில் பள்ளமாகவும் இருப்பதால் தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கி பாய்கின்றன.

8. இந்தியா அயன மண்டல பருவக்காற்று காலநிலையை பெற்றுள்ளது.
இந்தியா அயனமண்டல பகுதிகளில் அமைந்துள்ளது. காலநிலையை பருவக்காற்றுகள் நிர்ணயிக்கின்றன எனவே இக்கால நிலையை பெற்றுள்ளது

9. கிழக்கு தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
இவை பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளதால் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

10. விவசாயிகள் இரசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள் ஏன்?
மத்திய அரசின் விழிப்புணர்வு மற்றும் இயற்கை வேளாண்மையில் (செயற்கை உரங்கள் பூச்சிக் கொல்லிகளுக்கு பதிலாக) மண்புழு உரங்கள், தாவர, விலங்கு கழிவுகள் பயன்படுத்துவதால் விவசாயிகள் மாறுகின்றனர்.

11. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.
இமயமலையில் பனி ஆறுகளில் உருவாவதாலும், கோடையில் பனியாறுகள் உருகுவதாலும் இவ்வாறுகள் வற்றாத ஆறுகள்.

கட்டாய வினா
(BOOK INSIDE or BOOK BACK)

1. உலகின் பிரதான போக்குவரத்து வகைகள் யாவை?
2. புதுபிக்க கூடிய வளங்கள் பற்றி நீவிர் அறிந்ததென்ன?
3. மக்கள் தொகை சீரற்று இருப்பதற்கான சமூக பொருளாதார காரணிகள் யாவை?
4. புவியியல் குறியீடு : குறிப்பு வரைக
5. மண்வள பாதுகாப்பு மற்றும் மண்வள மேலாண்மையின் முறைகளை குறிப்பிடுக
6. இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்கள் யாவை?
7. இந்தியாவின் அட்ச தீர்க்க பரவலைக் குறிப்பிடுக?
8. கடல் பாதுகாப்பில் சதுப்பு நிலதாவரங்களின் பங்கு குறிப்பிடுக.
9. இமய மலையின் மலைவாழிடங்களின் பெயர்கள் எழுதுக.
10. தமிழ் நாட்டில் கால்நடை கணக்கெடுப்பு எவ்வாறு மேற்கொள்ளப் படுகிறது?
11. பழங்குடியினர் யார் அவர்கள்,
12. ஒபெக் எவ்வாறு பிறநாடுகளுக்கு உதவி செய்கின்றன?
13. வரி ஏன் விதிக்கப்படுகிறது?
14. வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது?
15. தொழில்மயமாதல் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கு என்னென்ன நன்மைகள் தருகிறது?
16. தொழிற் தொகுப்பு எவ்வாறு தோன்றுகிறது?
17. பெர்லின் சுவர் குறிப்பு வரைக?
18. சம்பரான் சத்தியாகிரகம் குறிப்பு வரைக?
19. இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட ராணுவ தளவாடங்கள் யாவை.
20. பனிப்போர் குறிப்பு வரைக.
21. லேட்டரன் உடன்படிக்கை வரையறு.
22. கடற்கரை சமவெளி எவ்வாறு உருவாகிறது?
23. சென்னை 'ஆசியாவின் டெட்ராய்டு' என அழைக்கப்படுவதேன்?
24. இந்தியா இடப்பெயர்வு வேளாண்மையின் பல்வேறு பெயர்கள்.
25. இந்தியா அணுக்கோட்பாடு இரண்டு கருத்துக்கள் யாவை.
26. உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை பற்றி எழுதுக.
27. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை வரையறு.
28. மேல்முறையீட்டு நீதிவரையறை வரையறு.
29. இரண்டாம் துறை வரையறு.
30. SIPCOT குறிப்பு வரைக.

வரலாறு 5 மதிப்பெண் வினாவிடைகள்

1. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

1. 1939 – 1945 வரைநடைபெற்ற போரில் 24 மில்லியன் இராணுவத்தினரும், 50 மில்லியன் மக்களும் உயிரிழந்தனர்.
2. உலகம் இரு வல்லரசு அணிகளாக அமெரிக்கா தலைமையிலும், சோவியத் யூனியன் தலைமையிலும் பிரிந்தது.
3. இரு வல்லரசு நாடுகளும், உலகில் பல நாடுகளும் அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்தன.
4. பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்கு பொது இடமாக சில பன்னாட்டு முகமைகள் (ஐ.நா.சபை, உலகவங்கி) உருவாகின.
5. காலனி நாடுகளுக்கு விடுதலை வழங்க வேண்டிய சூழல் காலனி ஆதிக்க நாடுகள் மாறின.
6. பெண்கள் உழைப்பாளர்களாகவும், பொருளாதார ரீதியாக சுதந்திரம் பெற்றதால் சமூக உறவுகள் மாறின. (திருமணம், குடும்பம்)

2. பெண்களின் மேம்பாட்டிற்கு 19ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக?

1. இராஜாராம் மோகன்ராய்;
உடன்கட்டை (சதி), பலதாரமணம் ஒழிப்பு, விதவை மறுமணம், பெண்கல்வி ஊக்குவிப்பு.
2. ஈஸ்வர சந்திர வித்யாசாகர்;
பெண் கல்விக்கு பெண்கள் பள்ளிகள், விதவை மறுமண ஆதரவு.
3. கேசவ சந்திர சென்;
கிருத்துவ மத சாரம், குழந்தை திருமண எதிர்ப்பு
4. M.G. ரானடே;
விதவை மறுமண சங்கம், சாதி மறுப்பு திருமணம்
5. சுவாமி தயானந்த சரஸ்வதி;
விதவை மறுமண ஆதரவு, குழந்தை திருமண எதிர்ப்பு
6. ஜோதிபா பூலே;
விதவைகள் காப்பகம், குழந்தை திருமண எதிர்ப்பு, உயர்சாதி இந்துக்கள் மறுமண ஆதரவு.

3. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி?

1. காந்தியடிகள் 1930ல் தொடங்கிய சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழகத்தில் பல்வேறு ரீதியான மக்கள் கலந்து கொண்டனர்.
2. சென்னையில் கடைகள் முன் மறியலும், அந்நிய பொருட்கள் புறக்கணிப்பும் நடந்தது.
3. ராஜாஜி வேதாரண்யத்தை நோக்கி உப்பு சத்தியாகிரகத்தை தொடங்கினார்.
4. நாமக்கல் கவிஞரின் தேசபக்தி பாடல்களும், பயணித்த பாதை எங்கும் வரவேற்பு கிடைத்தது.
5. உப்பு சட்டத்தை மீறியதால் ராஜாஜி உடன் 12 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.
6. இந்த சட்ட மறுப்பு இயக்கம் சென்னை, ராமேஸ்வரம் தூத்துக்குடி, உவரி மற்றும் பல இடங்களில் நடந்தது.
7. தீரர் சத்தியமூர்த்தி அந்நிய துணிகள் விற்கும் கடைகளை தடை செய்தார்

8. திருப்பூரில் கொடி ஏந்தி போராட்டம் நடத்திய திருப்பூர் குமரன் காவலர்கள் தடியடியால் இறந்தார். இவ்வாறு சட்ட மறுப்பு இயக்கம் தமிழகத்தில் மிகப்பெரிய எழுச்சி பெற்றது.

4. 19ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்?

1. 19ம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூக, சமய சீர்திருத்தங்கள் பல நடைபெற்றன.
2. இந்திய மக்கள் மேற்கத்திய கருத்துக்களால் (சமத்துவம்,சுதந்திரம்) கவரப்பட்டனர்.
3. எனவே நம் பண்பாட்டின் குறைகளை நீக்கி பழைய புகழை கொண்டு வர விரும்பினர்
4. நடுத்தர வர்க்கத்தினரின் மேற்கத்திய கருத்துக்கள், சிந்தனைகள்
5. இந்திய சீர்திருத்தவாதிகளின் இந்திய, மேற்கத்திய பண்பாட்டு இணக்க முயற்சி.
6. சீர்திருத்த வாதிகளின் கருத்துக்கள் சதி பெண்சிசு கொலை, குழந்தை திருமணம் போன்ற சமூக தீமைகளை கட்டுபடுத்தின.
7. இச்சூழல் 19ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் உருவாகி நாட்டின் பழம்பெரும் கலாச்சாரத்தை மீட்க விரும்பின

5. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்? (5 மற்றும் 8 மதிப்பெண் வினா)

பெரியாரின் பங்களிப்பு:

1. சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார்
2. பகுத்தறிவுக் கருத்துக்களை பரப்ப குடியரசு, ரிவோல்ட் பகுத்தறிவு, விடுதலை போன்ற பத்திரிக்கைகளை நடத்தினார்.
3. இந்தி மொழி கட்டாயத்தை எதிர்த்து இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்தினார்
4. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வைக்கம் போராட்டம்
5. குழந்தை திருமணம், தேவதாசி முறையை, மூட நம்பிக்கைகளை எதிர்த்தார்
6. பெண்களுக்கு சொத்துரிமை, ஆண்பெண் சமஉரிமை
7. சுய மரியாதை திருமணங்களை நடத்தினார், குருகுலப் பள்ளி சாதிவேறுபாடு எதிர்ப்பு
8. அனைத்து மதத்தினரும் அர்ச்சகர் ஆக வாதிட்டார்.

6. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமாக சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்? (5 மற்றும் 8 மதிப்பெண் வினா)

1. 1929ல் லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் முழு சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.
2. இதன்படி வரிகொடா இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் மூலம் வன்முறையின்றி சுதந்திரம் அடைய உறுதிமொழி ஏற்க்கப்பட்டது.
3. முக்கிய கோரிக்கையாக உப்பு வரியை ரத்து செய்யுமாறு காந்தியடிகள் அரச பிரதிநிதியிடம் அளித்தார்.
4. பதில் அளிக்காததால் சட்ட மறுப்பு இயக்கத்தை தீவிரப்படுத்தினார்.
5. பெண்கள், பல பிரிவு மக்களுடன் தண்டி யாத்திரையை தொடங்கி உப்பு காய்ச்சி தனது எதிர்ப்பை தெரிவித்தார்.
6. ஆனால் காந்தியடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆதனால் அவரின் புகழ் இந்திய அளவில் உயர்ந்தது

7. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்? (5 மற்றும் 8 மதிப்பெண் வினா)

1. வங்கப் பரிவினையால் தோன்றிய சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது
2. அந்நிய பண்டங்கள் புறக்கணித்தல் நடவடிக்கைகள்.
3. பாரதியாரின் தேசபற்று பாடல்களின் எழுச்சி.
4. சுதேசி கருத்துக்களை பரப்ப சுதேசமித்திரன்,இந்தியா போன்ற இதழ்கள் தோன்றின.
5. சுதேசி இயக்கத்தில் மாணவர்கள், இளைஞர்கள் சேர்ந்தனர்.
6. சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை வ.உ.சி தொடங்கினார்.
7. திருநெல்வேலி கலகம் போராட்டத்தை அதிகரித்தது.
8. ஒத்துழையாமை இயக்கத்தில் ராஜாஜியும், பெரியாரும் துடிப்புடன் செயல்பட்டனர்.
9. வரிகொடா இயக்கமும், அந்நிய பொருட்கள் புறக்கணிப்பு தமிழகம் முழுவதும் நடந்தது.

8. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி?

1. ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கை, எதிரணி சேர்க்கை; மூவர் உடன்படிக்கை ஜெர்மனி, ஆஸ்திரிய ஹங்கேரி, இத்தாலி. மூவர் கூட்டு நாடுகள் இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா.
2. வன்முறை சார்ந்த தேசியம்; இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி நாடுகளின் தேசபற்றின் வளர்ச்சி.
3. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை; ஜெர்மனியும், இங்கிலாந்தும் கப்பற்படையை விரிவுபடுத்தி போட்டியில் இறங்கியது.
4. பிரான்சு – ஜெர்மனி பகை; பிரான்சு தன் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழந்தது. மொராக்கோவில் இங்கிலாந்துபிரான்சு ஒப்பந்தத்தை ஜெர்மன் எதிர்த்தது.
5. பால்கன் பிரச்சனை ; பால்கன் பகுதியில் ஆஸ்திரியா செர்பியா இடையே பகை.
6. பால்கன் போர்; முதல், இரண்டாம் பால்கன் போரில் துருக்கி மற்றும் பல்கேரியா தோற்றது
7. உடனடிக்காரணம்; ஆஸ்திரியஹங்கேரி பேரரசின் மகனான பிரான்ஸ் பெர்டினாண்டு ஒரு செர்பியனால் கொல்லப்பட்டதே முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணமாக அமைந்தது.

9. 1905ம் ஆண்டு நிகழ்ந்த வங்காள பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?

1. மத அடிப்படையில் பிரித்த வங்கப் பிரிவினைமக்களை ஒன்றுபடச் செய்தது.
2. மிதவாதிகள், தீவர வாதிகள் என இரண்டாக போராட்டக் குழு பிரிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டது.
3. மனுக்கள், பொது கூட்டங்கள், செய்தி பிரச்சாரங்கள் மூலம் மக்கள் எதிர்ப்புநடந்தது.

4. அந்நிய பொருட்களை மக்கள் புறக்கணித்தனர்
5. சுதேசி இயக்கக் கொள்கை வங்க மக்களிடம் வேகமாக பரவியது.
6. புறக்கணிப்பும், சுதேசி இயக்கமும் இணைந்தே நடந்தது.
7. 1905 அக்டோபர் 16 பிரிவினை நாள் துக்க நாளாக மாறியது
8. மக்கள் பள்ளி, கல்லூரிகள் புறக்கணிப்பு, நீதிமன்ற அரசு சேவை புறக்கணிப்பில் ஈடுபட்டனர்

10. ஜெர்மனியின் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டு காட்டுக?

1. ஜெர்மனி இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.
2. ஜெர்மனி படை வீரர்கள் சுருக்கப்பட்டு, சிறிய கப்பற்படை வைக்க அனுமதி.
3. ஆஸ்திரியஜெர்மனி ஒருங்கிணைப்புக்கு தடை.
4. ஜெர்மனியின் காலனி நாடுகளின் உரிமையை நேச நாடுகள் பெற்றன.
5. ஜெர்மனியின் அல்சேஸ், லொரைன் பகுதிகள் பிரான்சிடம் ஒப்படைப்பு.
6. ஜெர்மனியின் டான்சிக் துறைமுகம் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைப்பு.
7. ஆஸ்திரிய சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரித்தல்

11. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா.சே துங்கின் பங்களிப்பினை அளவிடுக?

1. 1911ம்ஆண்டு புரட்சியில் தன் பொதுவுடைமை அரசியல் வாழ்வை துவங்கினார்.
2. 1933ல் கட்சியின் முழுகட்டுப்பாடு.
3. 1934ல்பொதுவுடைமை இராணுவத்தினருடன் நீண்ட பயணம்.
4. 1937ல் ஒரு கோடி மக்களின் தலைவர்.
5. தொழிலாளர்கள், விவசாயிகள் தன்பக்கம் ஈர்த்தார்.
6. 1948ல் நடுவண் ஆட்சிக்குழு தலைவர்.
7. சீனாவை 5 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தார்.
8. மாவோவின் தலைமையிலான சீன மக்கள் குடியரசு உலகில் சிறந்த பொதுவுடைமை நாடாக உருவெடுத்தது.

12. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலையைக் கண்டறியவும்?

1. முதல் உலகப்போரின் விளைவும், சமூக ஜனநாயகக் கட்சியின் வீழ்ச்சியும் ஹிட்லரின் எழுச்சிக்கும் காரணமாயின.
2. 1919ல் ஹிட்லர் உட்பட 7 பேர் நாசிக் கட்சியை நிறுவினர்.
3. ஹிட்லர் வன்முறைசார் அரசியலை யூதர்களுக்கு எதிராக வளர்த்தார்.
4. தேசிய புரட்சியில் சிறை சென்று தன் அரசியல் சிந்தனை நூலான எனது போராட்டத்தை எழுதினார்.
5. முதலாளிகள் சொத்து உரிமையாளர்களின் ஆதரவால் தவறான வழியில் அதிகாரத்தை கைப்பற்றினார்.
6. பின் 1933ல் ஹிட்லர் சான்சிலராக பதவியில் அமர தொழிலதிபர்கள், குடியரசுக் கட்சியினர் ஆதரித்தனர்.
7. இவ்வாறு ஹிட்லரின் நாசிக் கட்சி, ஜெர்மனியில் இருந்த பாராளுமன்ற ஜனநாயக கட்சியை முடிவுக்கு கொண்டுவந்தது.

13. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்?

1. 1905 கர்சனின் வங்கப்பிரிவினை இந்தியப் பிரிவினைக்கு முதல் காரணம்.
2. 1920ல் மத்திய சட்டபேரவையில் முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு என முஸ்லீம் லீக் கோரியது.
3. 1932ல் ராம்சே மெக்டொனல்டு வகுப்புவாத அறிக்கை.
4. 1940ல் முகமது அலி ஜின்னா தனிநாடு கோரிக்கை வைத்தார்.
5. இந்து மகா சபையும், முஸ்லீம் லீக்கும் அரசியல் காரணங்களுக்காக மதத்தை பயன்படுத்தின.
6. 1946ல் தேர்தல் இடைக்கால அரசில் இணைந்த முஸ்லீம் லீக் தனிநாடு கோரிக்கைக்கு வலு சேர்த்தது.
7. 1947 ஜீலை 18 பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலை சட்டம் மூலம் இந்தியா பாகிஸ்தான் என இரு நாடாக பிரித்து விடுதலை அறிவித்தது.

14. 1857 ம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பின் விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.
(5 மற்றும் 8 மதிப்பெண் வினா)

I. **ஆங்கிலேயரின் இணைப்புக் கொள்கை;**

1. ஆங்கிலேயர்கள் தங்கள் முழு அதிகாரங்களைக் கொண்டு சுதேச அரசர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என அவர்களின் ஆட்சிப் பகுதிகளை இணைத்துக் கொண்டனர்.
2. வாரிசு இழப்புக் கொள்கை மூலம் சதாரா, ஜான்சி, நாக்பூர், சாம்பல்பூர் ஆகியன இணைக்கப்பட்டன.

II. **இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரதன்மை இல்லாதது;**

1. மதக் குறியீடு, தாடி வைக்க தடை.
2. புதிய தலைப்பாகை அறிமுகம், ஆடை கட்டுப்பாடு.
3. ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம்.
4. பசு மற்றும் பன்றி கொழுப்பு தடவிய தோட்டாக்களின் பயன்பாடு.

III. **பின் விளைவுகள்;**

1. 1858 விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை.
2. கம்பெனி ஆட்சி முடிவு, இங்கிலாந்து அரசின் நேரடி ஆட்சி.
3. மதம் சார்ந்த விஷயங்களில் தலையீடு இல்லை.
4. அரசுப் பணியில் இந்தியர்கள், ராணுவ கட்டமைப்பில் மாற்றம்.
5. இந்திய அரசு செயலர் நியமனம்.

15. பன்னாட்டு (சர்வதேச சங்கத்தின் பணிகளை மதிப்பீடுக. அதன் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக?

பணிகள் :

1. 1920 ஆலேண்டு தீவுகள் பிரச்சினைக்குதீர்வு.
2. 1921போலந்துஜெர்மனி எல்லை பிரச்சினை தீர்வு.
3. 1925கிரிஸ்பல்கேரியா போர் நிறுத்தம்.
4. 1925லொகர்னோ உடன்படிக்கை.
5. மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பர அமைதி. தோல்விக்கான காரணங்கள் :

1. வெற்றிபெற்ற நாடுகளின் அரசியல் மையமானது.
2. சங்கத்திற்கென இராணுவம் இல்லை.
3. கூட்டு பாதுகாப்பு கோட்பாடுசெயல்படவில்லை.
4. சர்வாதிகார நாடுகள் சுதந்திரமாக செயல்பட்டன.
5. இங்கிலாந்து, பிரான்ஸ் மட்டும் உறுதியாக செயல்பட்டது.

புவியியல் 5 மதிப்பெண் வினாவிடைகள்

1. **தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக?**
   1. இந்திய கால நிலையின் முக்கிய அம்சம்.
   2. எல்நினோ நிகழ்வு மிகப்பெரிய தாக்கம்.
   3. ஜூன் முதல் வாரம் தென் இந்தியா, பிறகு இந்தியா முழுவதும்
   4. இதன் இடி, மின்னலுடன் கூடிய துவக்கம் பருவமழைவெடிப்பு.
   5. தென் முனையை அடையும் போது இரு கிளையாகிறது.

   I. **அரபிக்கடல் கிளை**
   1. மேற்குதொடர்ச்சி மலையில் அதிகமழை.
   2. வடஇந்தியா முழுவதும் கனமழை.
   3. இராஜஸ்தான், வடமேற்கில்மழை இல்லை.

   II. **வங்காள விரிகுடா கிளை**
   1. மேகாலயாவில் (மௌசின்ராம்) கனமழை.
   2. நாட்டின் மழைபொழிவில் 75% தருகிறது.
   3. தமிழ்நாடு குறைந்த மழை.

2. **இந்திய மண் வகைகள் எவையேனும் ஐந்தினை குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி?**
   1. **வண்டல்மண்**
      பண்பு – வெளிர்நிறமுடைய மணற்பாங்கானது.
      பரவல் – கங்கை, பிரம்மபுத்திரா, பஞ்சாப், ஹரியானா.
   2. **கரிசல் மண்**
      பண்பு – ஈரத்தை தக்க வைக்கும் சேறாகும்
      பரவல் – மகாராஷ்டிரா, தெலுங்கானா
   3. **செம்மண்**
      பண்பு – உப்புகரைசல், வெண்களிப்பாறை, வெடிப்புடன் கூடிய செம்மண் படிவு
      பரவல் – கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா
   4. **சரளைமண்,**
      பண்பு – உயரமான மலைகளில் அதிக அமிலத்தன்மையும் தாழ்வான பகுதியில் குறைந்தும் இருக்கும்
      பரவல் – அசாம் குன்று, கேரளா, கர்நாடகா
   5. **மலைமண்**
      பண்பு – மென்மையான மண் மற்றும் பாறைத்துகள்
      பரவல் – இமாச்சல், உத்ரகாண்ட், சிக்கிம்
   6. பாலைமண் குறைந்த வெளிர்நிறம், ஈரப்பதம்(இலைமக்கு)
   7. காரமண் சிதைக்கப்படாத பாறை, சிதைவுற்ற கனிமங்கள்
   8. களிமண் – ஈரத்தன்மைஇலைமக்குகருமை நிறம்

3. **இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.**
   1. மின் பற்றாக்குறையும் சீரற்ற மின் விநியோகம்.
   2. தொழிற்சாலைகள் நிறுவ பரந்த நிலப்பரப்பு இல்லை.
   3. கடன் பெறுவதில் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளன.
   4. கடனுக்கான வட்டி விகிதம் அதிகம் உள்ளது.
   5. குறைவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைப்பதில்லை.
   6. ஊழியர்களுக்கு தொழில்நுட்ப முறையான பயிற்சி இல்லாமை.
   7. தொழிற்பேட்டைகளுக்கு அருகில் வசிக்க ஏற்ற சூழல் இல்லை.

4. **பல்நோக்குத்திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு பல்நோக்குதிட்டங்கள் பற்றி எழுதுக?**

   பல்நோக்கு திட்டம்
   1. அறிவியல் முறையிலான நீர்மேலாண்மை திட்டம்
   2. ஆற்றின் குறுக்கே பல நோக்கங்களுக்காக அணைகளை கட்டுதல்
   3. நீர் மின் சக்தி, பாசனம் முக்கிய நோக்கமாகும்
   4. **பக்ரா நங்கல் திட்டம்;**
      1) சட்லஜ் நதியின் குறுக்கே உள்ள அணை.
      2) பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் பயன்பெறுகிறது.
      3) 1500 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி.
   5. **ஹிராகுட் திட்டம்;**
      1) மகாநதி குறுக்கே கட்டப்பட்ட அணை.
      2) ஒடிசா பயன்பெறுகிறது.
      3) 347.5 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி.

5. **தமிழ்நாட்டில் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக?**

   தோட்ட வேளாண்மை

   ஒரு பெரிய நிலப்பரப்பில் (மலைசரிவுகளில்) அறிவியல் முறைபடி ஒரே பயிரை அதிக அளவில் பயிரிடுவது.
   (எ.கா) காப்பி, தேயிலை, ரப்பர், முந்திரி, சின்கோனா, ஏலக்காய், மிளகு.
   1. **காப்பி :**
      1. காப்பி உற்பத்தியில் தமிழகம் இந்தியாவில் இரண்டாமிடம்
      2. மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலையில் பயிரிடப்படுகிறது
   2. **தேயிலை :**
      1. தேயிலை உற்பத்தியில் தமிழகம் இந்தியாவில் இரண்டாமிடம்.
      2. நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்ட மலைகளில் பயிரிடப்படுகிறது
   3. **ரப்பர் :**
      1. கன்னியாகுமாரி மலைப்பகுதியில் அதிகம் உள்ளது.
   4. **சின்கோனா :**
      1. ஆனை மலைப்பகுதியில் சின்கோனா பயிரிடப்படுகிறது.
   5. **முந்திரி :**
      1. கடலூர் மாவட்டத்தில் அதிகம் பயிராகும்.
   6. **ஏலக்காய் :**
      1. மதுரையை சுற்றியுள்ள மலைப்பகுதியில் பயிராகும்.
   7. **மிளகு :**
      1. மேற்கு, கிழக்கு தொடர்ச்சி மலைச்சரிவுகளில் பயிரிடப்படுகிறது.

6. **இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்? இந்தியக் காடுகள் எட்டு வகைப்படும்**
   1. **அயனமண்டல பசுமை மாறாக்காடுகள்**
      1. 200 செ.மீ மழை, 70% ஈரப்பதம்.
      2. ரப்பர், ரோஸ் தென்னை மரங்கள்,
      3. கேரளா, கர்நாடக பகுதிகள்
   2. **அயனமண்டல இலையுதிர்க் காடுகள்**
      1. 100 செ.மீ 200 செ.மீ வரை மழை
      2. 2.60%70% ஈரப்பதம்,
      3. தேக்கு, சந்தனம், மூங்கில் மரங்கள்.
      4. வடசமவெளி, பஞ்சாப், ஹரியானா பகுதிகள்

3. அயன மண்டல வறண்டக் காடுகள்
   1. 50 100 செ.மீ வரை மழை.
   2. குறைந்த ஈரப்பதம்.
   3. பலா, ஆலமரம், ஈச்சமரம்.
   4. கிழக்கு ராஜஸ்தான், பஞ்சாப்
4. மலைக்காடுகள்
   1. கிழக்கு இமயமலைக்காடுகள் கிழக்கு இமயமலை சரிவுகளில் உள்ளவை
   2. மேற்கு இமயமலைக்காடுகள் ஜம்முகாஷ்மீர், இமாச்சல், உத்ரகாண்ட்
5. அல்பைன்காடுகள்
   1. 2400 மீ மேல் கிழக்கு இமயமலை பகுதிகள்
   2. ஊசியிலை, ஓக், பைன் மரங்கள்
6. ஓத அலைக்காடுகள்
   கங்கைபிரம்மபுத்திரா, கோதாவரி, மகாநதி, டெல்டாப் பகுதிகள்
7. கடற்கரையோரக் காடுகள்(சவுக்கு, பனை, தென்னை)
8. ஆற்றங்கரை காடுகள்(புளியமரம்,பசுமை புதர் காடுகள்)
   1. கங்கை, யமுனை, (குறிப்பாக காதர் பகுதிகள்)

7. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின், பரவல் மற்றும் அவற்றின் பண்புகளை விளக்குக.

1. வண்டல் மண்

1. ஆறுகளால் படியவைக்கும் நுண் படிவுகளால் உருவான வளம் மிக்க மண்.
2. ஆற்றுப் பள்ளத்தாக்கு பகுதிகளில் இம்மண் அதிகம் உள்ளது.
